Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, AUGUST 05, 2021

வியாழக்கிழமை, 05 ஒகஸ்ட் 2021 | ஒளி: 07 கதிர்: 66 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE



## கைமீறினால் காற்கட்டு

நாட்டில் நிலவும் கொவிட்-19 நிலைமை கட்டுப்பாட்டை மீறினால், உரிய நேரத்தில் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் டொக்டர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## ஓர் அறிவிப்பு

60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு சினோர்ஃபாம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்துவது தொடர்பில், இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா அறிவிப்பொன்றை விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

கொரோனா தொற்றாளர்கள்

# நடைபாதையில் படுத்து உறக்கம்



கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை கிடுகிடுவென அதிகரித்துள்ளமையால், கொரோனா தொற்றாளர்கள் வைத்தியசாலைகள் பலவற்றின் நடைபாதைகளில், பாய்களைப் போட்டு, படுத்துத் தூங்கிக் கொண்டிருகின்றனர்.

தொடர்ச்சி P2

## ரிஷாட்டை விடுதலை செய்ய சபையில் மனோ வலியுறுத்து



பா.நிரோஸ்

அரசியல் காரணிகளுக்காக பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட்டை தடுத்து வைக்கக்கூடாதெனத் தெரிவித்த தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி, ரிஷாட்டை விரைவாக விடுதலை செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

"இன்று ரிஷாட்டுக்கு நடந்தது நாளை எமக்கும் நடக்கலாம்" என்றார்.

தொடர்ச்சி P2



## "சரியான நேரத்தில் வெளியில் இறக்குவேன்"

சரியான நேரம் வரும்போது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, தனியாகப் போட்டியிடும். அவ்வாறு போட்டியிட்டு ஆட்சியையும் கைப்பற்றும் என முன்னாள் ஜனாதிபதியும் சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன, நம்பிக்கை வெளியிட்டார்.

புத்தளத்தில் இடம்பெற்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுடனான கலந்துரையாடலுக்குப் பின்னரே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் எவையும் இடம்பெறவில்லை எனத் தெரிவித்த அவர்,

தொடர்ச்சி P2

கொத்தலாவல சட்டமூலத்தை மீளப் பெறுமாறு கோரி

## யாழ். பல்கலைக்கழகம் முன்பாக கவனயீர்ப்பு

### வாபஸ் பெற்றார் அமைச்சர் சமல்

எஸ்.நிதர்ஷன், எம்.றொசாந்த்

கொத்தலாவல சட்டமூலத்தை உடனடியாக மீளப் பெறுமாறு வலியுறுத்தி, யாழ். பல்கலைக்கழகத்தில், நேற்று (04) கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. யாழ். பல்கலைக்கழக சமூகத்தின் ஏற்பாட்டில், பல்கலைக்கழக நுழைவாயில் முன்னால், மதியம் 12 மணி முதல் 1 மணிநேரம் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தொடர்ச்சி P2






## 'லாப்'க்கு தட்டுப்பாடு

காஞ்சனகுமார ஆரியதாஸ

நாடுபூராகவும் 'லாப்' சமையல் எரிவாயுவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், 'லாப்' சமையல் எரிவாயுவைக் கொள்வனவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

அநேகமான விற்பனை நிலையங்களில் 'லாப் சமையல் எரிவாயு விற்பனைக்கு இல்லை' என எழுதப்பட்ட அறிவுறுத்தல்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

11 தமிழ் இளைஞர்கள் கடத்தல்:

## விசாரணைகளை இனிமேல் முன்னெடுக்கப் போவதில்லை



தமிழ் இளைஞர்கள் 11 பேரைக் கடத்தி, அவர்களின் உறவினர்களிடம் கப்பம் பெற்று, அதன்பின்னர் காணாமலாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னாகொடவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பிலான நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுக்கப் போவதில்லை என சட்டமா அதிபர் அறிவித்தார். கொழும்பு விசேட மூவரடங்கிய மேல் நீதிமன்றத்துக்கே, அவர் மேற்கண்டவாறு நேற்று (04) அறிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## இருவர் கைது

அரச சொத்துகளுக்கு சேதம் விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ், முன்னிலை சோசலிச கட்சியின் செயலாளரும் மற்றுமொருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாராளுமன்ற சுற்றுவட்டத்துக்கு அருகில், நேற்று முன்தினம் (03) இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போதே, அரச சொத்துகளுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் இவ்விருவரும் கைது செய்யப்பட்ட

தொடர்ச்சி P2



## "பாலசுப்பிரமணியம் பற்றி என்னிடம் கேட்கின்றனர்"

### ரிஷாட் எடுத்துரைப்பு; ஜனாதிபதியிடம் வேண்டிநின்றார்

24 மணிநேரமும் மூடிய அறைக்குள் வைத்துக்கொண்டு, என்னை மலசலகூடத்துக்கு மட்டும் வெளியில் செல்வதற்கு அனுமதிக்கின்றனர் எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன், ஜனாதிபதியிடமும் நீதிகேட்டு நின்றார்.

பாராளுமன்றத்துக்கு நேற்று (04) வருகைதந்திருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ, சபை நடவடிக்கை களை சிறிதுநேரம் அவதானித்தார். இதன்போது, ரிஷாட் பதியுதீன் எம்.பி உரையாற்றினார்

தொடர்ச்சி P2

ஜனாதிபதி செயலகத்தின் முன்பாக ஆர்ப்பாட்டம்:

## 16 பெண்கள் உட்பட 42 பேர் கைது

ஜனாபதி செயலகம் முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் கீழ், 42 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் 16 பேர் பெண்களாவர் எனத் தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண,

தொடர்ச்சி P2



சிறுவர் துஷ்பிரயோக வழக்குகளை

## விசாரிக்க ஒரு தினம்



நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள சிறுவர் துஷ்பிரயோக வழக்குகளை விசாரணைக்கு உட்படுத்துவதற்கு குறிப்பிட்ட திகதியை நிர்ணயிக்க நீதிச் சேவைகள் ஆணைக்குழுவுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது உடன்பாடு எட்டப்பட்டதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் முதித விதானபத்திரன தெரிவித்தார்.

அதற்கான சுற்றறிக்கை, நீதிச் சேவை ஆணைக்குழுவின் ஊடாக, சகல மேல்நீதிமன்ற நீதிபதிகளுக்கும் ஜூன் மாதம் 28ஆம் திகதியன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் நேற்று (03) நடைபெற்ற பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின் கூட்டத்தில் கலந்துகொண்டபோதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# நடைபாதையில் படுத்து உறக்கம்

இது தொடர்பில் வீடியோ காட்சிகளும், புகைப்படங்களும் சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ளன. இது, பேரபத்தை ஏற்படுத்தும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், வைத்தியசாலைகள் பலவற்றில் அவசர நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றாளர்களை அனுமதிக்கும் விடுதிகள் மட்டுமன்றி, அவசர சிகிச்சைப் பிரிவு விடுதி கட்டில்களும் கொரோனா தொற்றாளர்களால் நிரம்பியுள்ளன என்றும், அவசர நிலைமை பிரகடனப்படுத்தியிருக்கும் வைத்தியசாலைகளின் நிர்வாகங்கள் அறிவித்துள்ளன.

ராகமையில் உள்ள கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையில், கொரோனா தொற்றாளர்கள் நடைபாதையில், பாய்களைப் போட்டு படுத்து



உறங்குவதையும் அவதானிக்க முடிகின்றது.

நாளாந்தம் அனுமதிக்கப்படும் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளமையால் இவ்வாறான நிலைமையொன்று ஏற்பட்டுள்ளது என அந்த வைத்தியசாலையின் நிர்வாகம் அறிவித்துள்ளது.

இந்நிலையில், இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவுள்ள நான்கு கட்டில்களும் நிரம்பியுள்ளன.

போதனா வைத்தியசாலைகளின் அவசர சிகிச்சைப் பிரிவுகளில் நான்கு கட்டில்கள் மட்டுமே உள்ளன. அந்த நான்கு கட்டில்களும் கொரோனா தொற்றாளர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. சில வைத்தியசாலைகளில் அந்த நான்கு கட்டில்களும் நிரம்பியுள்ளன.

பதுளை வைத்தியசாலையிலும் அவசர நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. கொழும்பிலுள்ள சகல அரச மற்றும் தனியார் வைத்தியசாலைகளில் ஆகக்கூடுதலான கொள்ளளவுக்கு அண்மித்துள்ளது.

ஆகையால், கொழும்புக்கு வெளியே கொரோனா மத்திய நிலையங்களாக இருக்கும் மத்திய நிலையங்களின் புகுமுகக்கூடத்தில் வைத்து சிகிச்சையளிக்கப்படுகின்றன.

“தற்போது இனங்காணப்பட்டுள்ள கொரோனா தொற்றாளர்கள்களின் எண்ணிக்கையைப் போல, இன்னும் நான்கு அல்லது ஐந்து மடங்கு தொற்றாளர்கள் சமூகத்தில் உள்ளனர்” என ரவி குமுதேஷ் தலைமையிலான துணை மருத்துவ நிபுணர்களின் கூட்டு ஆணையம் அறிவித்துள்ளது.

# கைமீறினால் காற்கட்டு

“பயணக் கட்டுப்பாடுகளா? அல்லது நாட்டை முடக்கும் தீர்மானமா? என்பது தொடர்பில்,அரசாங்கத்தால் முடிவு செய்யப்படும் என்றார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய போதே, அவர் மேற்கண்ட விடயத்தை தெரிவித்தார்.

சுகாதார அதிகாரிகள் நிலைமையை அவ்வப்போது ஆய்வு செய்து பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர் என்று குறிப்பிட்ட அவர், தற்போது கொவிட் சூழ்நிலையை எதிர்கொள்ளும் நகர்வில் இருப்பதாகவும், அதே நேரத்தில் பொருளாதார மற்றும் சமூக அம்சங்களுடன் சமநிலையைப் பேணுவதாகவும் குறிப்பிட்டார்.

**“ கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்பட வேண்டும் அல்லது நாடு முடக்கப்படவேண்டும் என்று அதிகாரிகள் உணர்ந்தால், தயக்கமின்றி உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்**

இருப்பினும், கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்பட வேண்டும் அல்லது நாடு முடக்கப்படவேண்டும் என்று அதிகாரிகள் உணர்ந்தால், தயக்கமின்றி உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அவர் வலியுறுத்தினார்.

மறு அறிவிப்பு விடுக்கப்படும் வரை சுகாதார வழிகாட்டுதல்கள் மற்றும் நடைமுறைகளை கண்டிப்பாகப் பின்பற்றுவதன் முக்கியத்துவத்தையும் அவர் வலியுறுத்தினார்.

# ஓர் அறிவிப்பு

அதனடிப்படையில், கொழும்பு தேசிய வைத்தியசாலை, களுபோவில போதனா வைத்தியசாலை, ஐ.டி.எச் கொழும்பு, அவிசாவளை மாவட்ட வைத்தியசாலை மற்றும் விஹாரமகாதேவி திறந்தவெளி அரங்கு ஆகிவற்றில் இன்று (05) காலை 8.30 மணிமுதல், முதலாவது டோஸ் செலுத்தப்படும்.

# ரிஷாட்டை விடுதலை செய்ய சபையில் மனோ வலியுறுத்து

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், அரசியல் காரணிகளுக்காக ஒரு பாராளுமன்ற உறுப்பினரைத் தடுத்துவைக்க கூடாது. எவ்விதக் குற்றச்சாட்டுகளும் இல்லாது ரிஷாட் தடுத்துவைக்கப்பட்டுள்ளார். அவரிடம் விசாரணைகள் மேற்கொள்ளவில்லை என்றால் அவரை விடுதலை செய்ய வேண்டும் என்றார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை 100 நாள்களுக்கும் அதிகமாக தடுப்புக் காவலில் வைத்திருப்பது, பாராளுமன்ற உறுப்பினரின் கௌரவத்துக்கு முரணானது. இது தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் விரைவாக தீர்மானம் ஒன்றை எடுத்து, ரிஷாட்டை விடுதலை செய்ய வேண்டும் என்றார்.

இதேவேளை, தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு 1,000 ரூபாய் சம்பள உயர்வு வழங்கப்பட்டால், மாதமொன்றுக்கு 25,000

**“ பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை 100 நாள்களுக்கும் அதிகமாக தடுப்புக் காவலில் வைத்திருப்பது, பாராளுமன்ற உறுப்பினரின் கௌரவத்துக்கு முரணானது. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் விரைவாக தீர்மானம் எடுத்து, ரிஷாட்டை விடுதலை செய்ய வேண்டும்**

ரூபாய் சம்பளம் கிடைக்க வேண்டும். ஆனால், 10, 12 நாள்கள்தான் வேலை வழங்கப்படுகிறது என்றார்.

கம்பனிகளின் தேவைளுககு ஏற்ப சம்பளம் வழங்கப்படுகிறது. புதிய வேதன திருத்தச் சட்டத்தில் 25 நாள்கள் வேலை கட்டாயம் வழங்கப்பட வேண்டுமெனவும் குறைந்தப்பட்ட சம்பளம் 500 ரூபாய் என்றும் கூறப்பட்டுள்ளது. இதனை 1,000 ரூபாயாக மாற்றினால் தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,000 ரூபாய் நாள் சம்பளம் கிடைக்கும். இவ்வாறு இல்லாமையால்தான் கம்பனிகள், நீதிமன்றம் சென்றுள்ளன என்றார்.

# சரியான நேரத்தில் வெளியில் இறக்குவேன்

ஆகையால் மக்கள் மனவேதனையுடன் வேண்டா வெறுப்பாக இருக்கின்றனர் என்றார்.

விழுந்துகிடக்கும் மிகவும் பலமான சக்தியொன்று மிகவிரைவில் எழுந்து நிற்கும் எனத் தெரிவித்த அவர், கட்சியின் அமைப்பை பலப்படுத்தினால் அச்சக்தியை எழுப்பி நிற்கச்செய்வது அவ்வளவு கடினமான காரியமல்ல என்றும் அவர் குறிப்பிட்டார்.

# இருவர் கைது

அவர்கள் இருவரும், நீதிமன்றத்தில் நேற்று (04) ஆஜர்படுத்தப்பட்டனர். அப்போது அவ்விருவரையும் எதிர்வரும் 11ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

# யாழ். பல்கலைக்கழகம் முன்பாக...

இதில், பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பல தரப்பினரும் கலந்துகொண்டனர்.

இதன்போது, “அரச பல்கலைக்கழக முறைமை நீர்த்துப்போகச் செய்யும் கொத்தலாவல சட்டமூலத்தை உடனடியாக மீளப்பெறு”, “கல்விசாரா ஊழியர்களின பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு வழங்குங்கள்”, “கல்வியை வியாபாரமாக்கும் கொத்தலாவ சட்டமூலத்தை கிழித்தெறி”, “இலவசக் கல்வியை பாதுகாக்க இலங்கையராக ஒன்றிணைவோம்”, “எதிர்கால மாணவர்கள் கடனாளிகளாக மாற வேண்டுமா” உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாககளை தாங்கியவாறு இந்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அத்துடன், உயர் கல்வியை இராணுவ மயமாக்குவதையும் தனியார் மயமாக்குவதையும் எதிர்ப்போம் என்றும் ஜனநாயகம் மிக்க சமூகத்தை கட்டியெழுப்புவோம் என்றும் வலியுறுத்தப்பட்டது.

இந்நிலையில், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலத்தை, 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளாதிருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என அமைச்சர் சமல் ராஜபக்‌ஷ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எம்.பி எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே மேற்கண்வாறு தெரிவித்த அமைச்சர் சமல் ராஜபக்‌ஷ, இந்தச் சட்டமூலம் தொடர்பில் மேலும் கலந்துரையாடுவதற்கு மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்றார்.

# 16 பெண்கள் உட்பட 42 பேர் கைது

அவ்வனைவருக்கு எதிராகவும் சட்டரீதியிலான நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

ஆர்ப்பாட்டத்துக்கு அப்பால், ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக பிரதான வீதியை மறித்து போக்குவரத்து நெரிசல்களை ஏற்படுத்திய குற்றச்சாட்டின் கீழ், 10 வாகனங்களையும் தமது பொறுப்பின் கீழ் கொண்டுவந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிகளை மீறிய குற்றச்சாட்டின் கீழே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தண்டனை கோவைச்சட்டத்தின் கீழ், சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக நீதிமன்றத்தில் இவர்கள் முன்னிலைப்படு த்தப்படுவார்கள் என்றார்.

சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட தமது கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றக் கோரி, அதிபர், ஆசிரியர் சங்கங்களைச் சேர்ந்தவர்கள், நான்கு இடங்களிலிருந்து கொழும்புக்கு நேற்று (04) பேரணி நடத்தினர்.

அவ்வாறு வந்தவர்கள் ஜனாதிபதி செயலகத்துக்கு

**“ ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக பிரதான வீதியை மறித்து போக்குவரத்து நெரிசல்களை ஏற்படுத்திய குற்றச்சாட்டிலும் தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிகளை மீறிய குற்றச்சாட்டிலும் கைது செய்யப்பட்டுள்ளனர். தண்டனை கோவைச்சட்டத்தின் கீழ், சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்**

முன்பாக ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர். இதனால், கொழும்பு-காலி வீதியிலும் புறக்கோட்டை உள்ளிட்ட அதனை அண்மித்த பகுதிகளிலும் கடுமையான வாகன நெரிசல் ஏற்பட்டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், பாராளுமன்றத்தில் நேற்று (04) நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிக்கொண்டிருந்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி விஜேரத்ன, கைது செய்யப்பட்ட அனைவரும் ஆசிரியர்கள், ஆகையால் அவர்களை விடுவிக்குமாறும் கோரிநின்றார்.

# விசாரணைகளை இனிமேல் முன்னெடுக்கப் போவதில்லை

கொழும்பில் வசித்த 11 இளைஞர்களை கடத்தி காணாமலாக்கியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் சட்டமா அதிபரினால் தொடரப்பட்டிருந்த வழக்கின் 14 ஆவது பிரதிவாதியாக கடற்படையின் முன்னாள் தளபதியான வசந்த கரன்னாகொட பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

குற்றப்பத்திரத்திற்கு எதிராக பிரதிவாதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு மனு மீதான விசாரணை நிறைவு பெறும் வரை, அவருக்கு எதிரான குற்றச்சாட்டு தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுக்கவேண்டாம் என உத்தரவிட்டுள்ளதாக, சட்டமா அதிபர் சார்பில் ஆஜராகிய அரச சிரேஷ்ட சட்டத்தரணி ஜனக்க பண்டார, நீதிமன்றுக்கு அறிவித்துள்ளார்.

குறித்த மேன்முறையீட்டு மனு எதிர்வரும் 30 ஆம் திகதி மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. அன்றைய தினத்தில் சட்டமா அதிபரின் நிலைப்பாடு மேன்முறையீட்டு

**“ சட்டமா அதிபரின் நிலைப்பாட்டை மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அறிவித்ததன் பின்னர் மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கும் உத்தரவை, எதிர்வரும் செப்டம்பர் 22 ஆம் திகதி, வழக்கின் ஏனைய பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகும் சந்தர்ப்பத்திலேயே மன்றுக்கு அறிவிக்குமாறு நீதிபதிகள் குழாம் உத்தரவிட்டது**

நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்படும் அரச சிரேஷ்ட சட்டத்தரணி ஜனக்க பண்டார தெரிவித்துள்ளார்.

விடயங்களை ஆராய்ந்த சம்பா ஜானகி ராஜரத்ன, அமல் ரணராஜா மற்றும் நவரத்ன மாரசிங்க உள்ளிட்ட நீதிபதிகள் குழாம், சட்டமா அதிபரின் நிலைப்பாட்டை மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அறிவித்ததன் பின்னர் மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கும் உத்தரவை, எதிர்வரும் செப்டம்பர் 22 ஆம் திகதி, வழக்கின் ஏனைய பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகும் சந்தர்ப்பத்திலேயே மன்றுக்கு அறிவிக்குமாறு உத்தரவிட்டது.

# பாலசுப்பிரமணியம் பற்றி என்னிடம் கேட்கின்றனர்

“சி.ஐ.டி யில் 102 நாள்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளேன். எனினும், வெறுமனே 5 நாள்கள் மட்டுமே என்னிடம் விசாரணை செய்துள்ளனர்” என்றார்.

ஜனாதிபதியும், பிரதமரும் இந்தச் சபையில் இருக்கின்றீர்கள். ஏப்ரல் 24ஆம் திகதி கைது செய்த என்னிடம் வெறும் 5 நாள்கள் மாத்திரமே விசாரணை செய்தார்கள். ஆனால், 102 நாள்கள் நான் தடுத்துவைக்கப்பட்டுள்ளேன் என்றார். “ஏனைய 97 நாள்களும் வரையில் அறையில் அடைத்து வைத்துள்ளார்கள். 24 மணி நேரமும் அந்த அறை மூடப்பட்டுள்ளது. மலசலகூட த்துக்கு மட்டும் என்னை வெளியில் செல்ல அனுமதிக்கிறார்கள். இன்றுவரை, எந்தவிதமான விசாரணைகளும் இடம்பெறவில்லை. நான் பொய் கூறவில்லை. வேண்டுமென்றால் வந்து பார்க்க முடியும்” என்றார்.

ஜனாதிபதி அவர்களே!, இன்னுமொரு விடயம். என்னைக் கைது செய்த போது, பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் “என்னை ஏன் கைது செய்கிறீர்கள்?” என நான் கேட்டேன். எனது அமைச்சில் பணிபுரிந்த மேலதிக செயலாளர் பாலசுப்பிரமணியத்துடன், ஒன்றரை நிமிடம் தொலைபேசியில் உரையாடியதாகக் கூறினார்கள். இதனால்தான் என்னை கைது செய்துள்ளதாகக் கூறினார்கள். வேறு எந்தக் காரணமும் இல்லை ஜனாதிபதி அவர்களே. வேறு எந்தக் காரணமும் இல்லை என ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளார்.

இதனிடையே எழுந்த அரசாங்க முதற்கோலாசான் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, பாலசுப்ரமணியம் வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்றுவிட்டார் என்றார்.

# விசாரிக்க ஒரு தினம்

“இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் துஷ்பிரயோகம், அடிமைத்தனம் மற்றும் பிற தீங்கு விளைவிக்கும் செயற்பாடுகளுக்கு எதிராக தற்போதுள்ள சட்டங்களை வலுப்படுத்தவும், புதிய சட்டங்களை கொண்டு வரவும் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுக்க உரிய நடவடிக்கைகளைத் விரைந்து ஆரம்பிக்கவும் ஒன்றியம் வழிநடத்தும்” என பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின் தவிசாளர் இராஜாங்க அமைச்சர் வைத்தியர் சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே தெரிவித்தார்.

கடந்த 6 மாதங்களில் 4,740 சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக ஒன்றியத்தின் பிரதி தவிசாளர் ரோஹினீ கவிரத்ன எம்.பி தெரிவித்துள்ளார்.

18 வயதுக்கு உட்பட்ட எந்தவோர் ஆண் அல்லது பெண் சிறுவர்களை வீட்டு

**“ இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் துஷ்பிரயோகம், அடிமைத்தனம், பிற தீங்கு விளைவிக்கும் செயற்பாடுகளுக்கு எதிராக சட்டங்களை வலுப்படுத்தவும், புதிய சட்டங்களை கொண்டு வரவும் சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுக்க உரிய நடவடிக்கைகளை ஒன்றியம் வழிநடத்தும்**

வேலைகளுக்கு பயன்படுத்துவதற்கு எதிராக சட்டத்தின் கடுமையான அமலாக்கம், சிறுவர் துஷ்பிரயோகம் குறித்த சட்டங்களை அமல்படுத்துதல் மற்றும் மிலேச்சத்தனமான சிறுவர் துஷ்பிரயோகம் தடுப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் சிறுவர்கள் தொடர்பான சில பழைய சட்டங்களைப் புதுப்பித்தல், பாதுகாப்பு தொடர்பில் அனைத்து சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கிடையிலான முறையான ஒருங்கிணைப்பு அவசியம் என்றும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

# ‘லாப்’ க்கு தட்டுப்பாடு

லாப் சமையல் எரிவாயுவுக்கு கடந்த ஒருமாதமாக தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், அந்த வகை சமையல் எரிவாயுவை பயன்படுத்தும் அநேக ஹோட்டல் துறையினர் உள்ளிட்ட பலர் பாரிய அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இதேவேளை, எரிபொருள் கொள்வனவுக்காக வரும் நுகர்வோர் வெறுங்கையுடன் திரும்பிப் போவதாகத் தெரிவித்த விற்பனைப் பிரதிநிதியொருவர், இத்தட்டுப்பாடு சில வாரங்களில் நீங்கும் எனநம்புவதாகவும் தெரிவித்தார். மஞ்சள் நிற சிலிண்டருக்கு லிட்ரோ நிறுவனத்தின் நீல நிற சமையல் எரிவாயு சிலிண்டர்களைப் பெற்றுக்கொள்ள முடியுமென கடந்த வாரம் லிட்ரோ நிறுவனமும் நுகர்வோர் விவகார அமைச்சரும் அறிவித்த நிலையில், பல இடங்களில் லிட்ரோ விற்பனை நிறுவனங்களின் முன்பாக மஞ்சள் நில சிலிண்டர்களுடன் நுகர்வோர் காத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், தமக்கு உத்தியோகப்பூர்வமாக அவ்வாறானதோர் அறிவிப்புக் கிடைக்காமையால், மஞ்சளுக்குப் பதிலாக நீல சிலிண்டர்களை வழங்க முடியாதென விற்பனைப் பிரதிநிதிகள் அறிவித்துள்ளனர்.

## விவசாயத்துறை அமைச்சர்

# மஹிந்தானந்தவுக்கு கொரோனா தொற்று

## தனிமையில் அமைச்சர் கம்மன்பில





விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து, அமைச்சரும், அமைச்சருடன் தொடர்பை பேணியவர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில, தான் சுய தனிமைப்படுத்தலுக்கு உள்ளாகியுள்ளதாக தனது ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அவரது அமைச்சின் அலுவலகத்தில் பணிபுரியும் சில அதிகாரிகளுக்கு கொரோனா தொற்றுக்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

தமக்கு மேற்கொள்ளப்பட்ட முதலாவது அன்டிஜன் பரிசோதனையில் தொற்று உறுதியாகாத போதிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தன்னைத் தான் தனிமைப்படுத்திக் கொண்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

தொற்று நீக்கும் நடவடிக்கைகளுக்காக, வலுசக்தி அமைச்சின் அலுவலகம், நாளை (06) வரை மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கன்னியா சிவன் கோவிலில்

# பிதிர்கடன் நிறைவேற்ற நீதிமன்றம் அனுமதி

அ.அச்சுதன்

வரலாற்றுச் சிறப்புமிக்க திருகோணமலை கன்னியா சிவன் கோவில் வளாகத்துக்குள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (08) ஆடி அமவாசை தின பிதிர் (இறந்தவர்களுக்கான) கடன் தானம் வழங்கல் நிகழ்வுக்கு திருகோணமலை நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

அன்றைய தினம் காலை 08 மணி தொடக்கம் காலை 10 மணி வரை அங்கு நடத்துவதற்கு பிதிர்கடன் நிறைவேற்றலாம் என நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

பிதிர் கடன் நிறைவேற்றும் அடியார்கள், அன்றைய தினத்தில் சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடித்துக் கலந்துகொள்ளுமாறு, கோவில் நிர்வாகிகள் அறிவித்துள்ளனர்.





# பஸ்களில் நின்றுகொண்டு பயணித்தால் சட்டம் பாயும்

நாட்டின் சில பகுதிகளில் பஸ்களில் பயணிகள் நின்றுகொண்டு பயணிக்கின்றமை தொடர்பில் தகவல் கிடைத்துள்ளதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

இவ்வாறு, ஆசனங்களின் எண்ணிக்கைக்கு மேலதிகமாக நெருக்கிய வண்ணம் பயணிகளை ஏற்றிச்செல்லும் பஸ் ஊழியர்களுக்கு எதிராக கடுமையான சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அவர் எச்சரித்தார்.

இது தொடர்பில் பொலிஸ்மா அதிபருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளதாகவும் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

இதன்படி, குற்றமிழைக்கும் சாரதிகள், நடத்துநர்கள் கைது செய்யப்பட்டு, தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் என்றும் போக்குவரத்து அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## கொரோனா பரவல்:

# காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு பூட்டு

பத்தரமுல்லையில் உள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் நான்கு அதிகாரிகள் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, பத்தரமுல்லையில் உள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தை, காலவரையறையின்றி மூட சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர்.




## யாழ். போதனாவில்

# குருதிக்கு தட்டுப்பாடு

எம்.றொசாந்த்



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில், சகல வகை இரத்தங்களுக்கும் தட்டுப்பாடு நிலவுவதாக, இரத்த வங்கி அறிவித்துள்ளது.


எனவே, ஏற்கெனவே இரத்தம் வழங்கி 4 மாதங்கள் பூர்த்தியானவர்கள், கொவிட் - 19 தடுப்பூசி போட்டு, ஒரு வார காலத்துக்கு மேற்பட்டவர்கள் இரத்தம் வழங்க முடியும் எனவும் அறிவித்துள்ளது

மேலதிக தகவல்களுக்கு 077- 2105375 எனும் அலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு, இரத்த வங்கி கேட்டுக்கொண்டுள்ளது.

## நாளாந்த

# தொற்றாளர் தொகை சடுதியாக அதிகரிப்பு

## விதிகளை மீறிய 53,143 பேர் கைது



நாட்டில் நாளாந்தம் அடையாளம் காணப்படும் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை தற்போது சடுதியாக அதிகரித்துள்ளது. நாளொன்றுக்கு ஆயிரம் பேர் என்பதைத் தாண்டி, இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோர் புதிய தொற்றாளர்களாக அடையாளம் காணப்படுகின்றனர்.

இதன்படி, நேற்று முன்தினம் (03) மாத்திரம் 2,423 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில், நாட்டில் பதிவான கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை, நேற்று (04) மாலை 316,194ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனா வைரஸ்தொற்றில் இருந்து இதுவரை பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 284,524ஆக உள்ளது.

மேலும், தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 4,645 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டில் நேற்றுக் காலை முடிந்த 24 மணிநேரத்தில் 113 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அதனடிப்படையில், தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரையில் கைதுசெய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 53,143ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாணவர்களுக்கு நல்லதை கற்பியுங்கள்

அரசியல் நோக்கங்களுக்காக ஸ்டாலின் போன்றவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு, மாணவர்களின் எதிர்காலத்தைச் சீரழிக்கிறார்கள் எனத் தெரிவித்த நெடுஞ்சாலை அபிவிருத்தி அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, மாணவர்களுக்கு நல்ல விடயங்களைக் கற்றுக்கொடுங்கள் என்றே ரஷ்யாவின் லெலின் போராடினார் எனவும் சுட்டிக்காட்டினார்.

ஆசிரியர், அதிபர் போராட்டங்கள் ஊடாக, கொரோனாவின் நான்காம் அலையை உருவாக்கவே அவர்கள் முயற்சிக்கிறார்கள் எனவும் அவர் சாடினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கொரோனா தாக்கத்தின் காரணமாக மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. நிகழ்நிலை முறைமை ஊடான கற்பித்தலில் எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றம் காணப்பட்டது. இருப்பினும், ஆசிரியர், அதிபர் தொழிற்சங்கத்தினரது போராட்டம் அதற்கும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

“இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதாக ஜனாதிபதியும் பிரதமரும் வாக்குறுதி வழங்கியுள்ளார்கள். தீர்வு நிச்சயம் கிடைக்கும் என்பதை அறிந்துகொண்டு, ஆசிரியர் தொழிற்சங்கத்தினர் போராட்டத்தில் ஈடுப்படுவது அவர்களின் குறுகிய அரசியல் நோக்கத்தை வெளிப்படுத்தியுள்ளது.

“வைரஸ் பரவல் மீண்டும் தீவிரமடையும் என சுகாதார தரப்பினர் அறிவுறுத்தியுள்ளார்கள். இவ்வாறான நிலையில் போராட்டத்தில் ஈடுபடுவது வெறுக்கத்தக்க செயற்பாடாகும்” என்றார்.

## இலங்கை உள்ளிட்ட நாடுகளின்

# பயணத் தடையை தளர்த்தியது டுபாய்

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், நைஜீரியா, உகண்டா உள்ளிட்ட நாடுகள் மீதான பயணத் தடையை தளர்த்துவதாக டுபாய் அறிவித்துள்ளது.

இந்தியாவில் டெல்டா வைரஸ் பரவல் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து டுபாயால் விதிக்கப்பட்டிருந்த பயணத்தடையே நீக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மேற்படி நாடுகளைச் சேர்ந்த பயணிகள், இன்று (05) முதல் டுபாய் அல்லது டுபாயின் ஊடாக வேறு நாடுகளுக்குப் பயணிக்க முடியும்.

எனினும், பயணிப்பதற்கு 72 மணி நேரத்துக்கு முன்னர் பி.சி.ஆர் பரிசோதனையை மேற்கொண்டு, கொரோனா தொற்று இல்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.



# பாராளுமன்றத்துக்கு ஜனாதிபதி வருகை

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நேற்றைய (04) பாராளுமன்ற அமர்வில் கலந்துகொள்வதற்காக பாராளுமன்றத்துக்கு வருகைதந்தார்.

முற்பகல் 11.15 மணியளவில், பாராளுமன்ற வளாகத்துக்கு வருகைதந்த அவரை, சபை முதல்வரும் வெளிநாட்டு அமைச்சருமான தினேஷ் குணவர்தன, ஆளுங்கட்சியின் பிரதம கொறடா ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, இராஜாங்க அமைச்சர்களான கஞ்சன விஜேசேகர, இந்திக்க அநுருத்த ஆகியோர் வரவேற்று, சபை மண்டபத்துக்குள் அழைத்துவந்தனர்.

அதனை அடுத்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் ஜனாதிபதி சபைக்கு வருகைதந்தார்.

சபையில் உறுப்பினர்களின் வாய்மூல விடைகான கேள்விகள் மற்றும் அதற்கான பதிலளிக்கும் சந்தர்ப்பத்தில் கலந்துகொண்ட ஜனாதிபதி, நண்பகல் 12 மணிவரை சபையில் இருந்தார்.

சபையில் இருந்த வேளையில் ஜனாதிபதி, பிரதமர், சபை முதல்வர், ஆளுங்கட்சியின் பிரதம கொறடா ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ ஆகியோருடன் உரையாடிக்கொண்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

மேலும், பாராளுமன்ற வளாகத்தில் உள்ள அவரது அலுவலகத்தில், ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் சுமூகமாகக் கலந்துரையாடினார்.



## மற்றுமொரு சம்பவம் நடந்தேறியது;

# சுகாதாரப் பரிசோதகர் மீது துப்பியவருக்கு விளக்கமறியல்

பொதுச் சுகாதார பரிசோதகர் ஒருவரைத் தாக்கி, அவர் மீது உமிழ்ந்த (துப்பிய) நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண, நேற்று (04) தெரிவித்தார்.

கிரிஉல்ல, புஸ்கொலதெனிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட மேற்படி 48 வயது சந்தேகநபர், எதிர்வரும் 14ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கொரோனா தொற்றாளர் ஒருவரின் வீட்டுக்கு, கடமை நிமித்தம் சென்றிருந்த, பொதுச் சுகாதார பரிசோதகர் மீது, மது போதையில் இருந்த சந்தேகநபர் இவ்வாறு தாக்குதல் நடத்தி, துப்பியுள்ளார்.

இதேவேளை, இதேபோன்றதொரு சம்பவம் கடந்தாண்டு டிசெம்பர் மாதம் பண்டாரகம- அடுலுகம பிரதேசத்தில் இடம்பெற்றிருந்தது.

## ஆர்ப்பாட்டத்தில்

# ஓ.ஐ.சியின் விரல்கள் நசுங்கின

## சத்திரசிகிச்சையும் முன்னெடுப்பு

பாராளுமன்றம் அருகே நேற்று முன்தினம் (03) இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது, மஹரகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பிரதான பொலிஸ் பரிசோதகர் எச்.எச். ஜனகாந்தவின் இரு விரல்கள் நசுங்கிக் காயமடைந்துள்ளன என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதனையடுத்து, தலவத்துகொடையிலுள்ள தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி (ஓ.ஐ.சி) சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். விரல் காயங்களுக்காக, மூன்று மணி நேர அறுவை சிகிச்சை செய்யப்பட்டதாகவும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

போராட்டத்தின் போது, ஆர்ப்பாட்டக்காரர்கள், வீதித் தடுப்பைத் தூக்கியெறிய முயன்ற நிலையில், அதனைத் தடுக்க முயற்சித்த போதே, ஓ.ஐ.சி இவ்வாறு காயமடைந்துள்ளார்.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகச் சட்டமூலத்தை திரும்பப் பெறக் கோரி, பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.



# காயமடைந்த ஓ.ஐ.சியை காணச்சென்ற அமைச்சர்




சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு தலவத்துகொடையிலுள்ள தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள, மஹரகம பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி, பிரதான பொலிஸ் பரிசோதகர் எச்.எச். ஜனகாந்தவை, பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, நேற்று (04) பார்வையிட்டார்.

வைத்தியசாலையில் சுமார் 10 நிமிடங்கள் தங்கியிருந்த அமைச்சர், ஓ.ஐ.சி விரைவாக குணமடைவதற்காக பிரார்த்தித்துச் சென்றார்.

# இராணுவம் வசமிருந்த காணி உரிமையாளரிடம் ஒப்படைப்பு

■ எம்.எம்.அஹமட் அனாம், ஏ.எச்.ஏ. ஹுஸைன்



இராணுவப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக யுத்த காலத்தில் கையகப்படுத்தப்பட்ட தனியார் காணிகள், ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாக, அக்காணிகளின் உரிமையாளர்களிடம் உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்டு வருகிறன.

இதனடிப்படையில், மட்டக்களப்பு, கும்புறுமுலை பகுதியில் நீண்ட காலமாக இராணுவ முகாம் அமையப்பெற்றிருந்த சுமார் 12 ஏக்கர் காணி, நேற்று முன்தினம் (03) அதன் உரிமையாளரிடம் கையளிக்கப்பட்டது.

இராணுவத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் கே.கருணாகரன் தலைமையேற்றிருந்தார்.

நிகழ்வின் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சன்ன வீரசூரிய கலந்துகொண்டு, மாவட்டச் செயலாளரிடம் காணிப் பத்திரத்தை கையளித்ததுடன், மாவட்டச் செயலாளர், அதை உரிமையாளரிடம் ஒப்படைத்தார்.

கொவிட் – 19 அபாயம்: திருக்கோவிலில்

# முதலாவது மரணம் பதிவு

## அவதானமாக இருக்குமாறு மக்களிடம் கோரிக்கை

■ எஸ்.கார்த்திகேசு




கல்முனை, திருக்கோவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவகப் பிரிவில் முதலாவது கொரோனா மரணம் பதிவாகியுள்ளதாக திருக்கோவில் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் பி.மோகனகாந்தன் தெரிவித்தார்.

திருக்கோவில், தம்பட்டை கிராமத்தைச் சேர்ந்த 60 வயது ஆண் ஒருவரே, கொவிட்-19 தொற்றுக் காரணமாக, அக்கரைப்பற்று கொரோனா சிகிச்சை நிலையத்தில் சிகிச்சைப் பெற்று வந்த நிலையில், நேற்று முன்தினம் (03) மரணமடைந்துள்ளார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவிலுள்ள 13 பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிக்கு உட்பட்ட பிரிவுகளில், திருக்கோவிலில் இதுவரை காலமும் கொரோனா பாதிப்பு மிகவும் குறைந்த அளவில் இருந்த போதிலும் தற்போது முதலாவது கொரோனா மரணம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், திருக்கோவில் பிரதேசத்தில் தற்போது கொரோனா தொற்று வீதம் அதிகரித்துச் செல்லும் நிலையில், தடுப்பூசிகள் செலுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தடுப்பூசியை செலுத்திக் கொள்ளத் தவறியவர்கள் தடுப்பூசியை செலுத்திக்கொள்வதுடன் தடுப்பூசியை செலுத்திக் கொண்டவர்களும் சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடித்து, கொரோனா தொற்றால் ஏற்படும் மரணத்தை தடுக்குமாறு, வைத்திய அதிகாரி, திருக்கோவில் பிரதேச மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

‘நாம் சஹ்ரான் ஆட்களென

# பேஸ்புக்கில் கொலை மிரட்டல்’

■ வி.ரி.சகாதேவராஜா



“நாம் சஹ்ரான் அணியைச் சேர்ந்தவர்கள். இன்னும் மூன்று மாதங்களுக்குள் நீ கொலை செய்யப்படுவாய். வாகனத்தில் குண்டுவைத்து, வெடிக்கவைக்கப்படுவாய்” என்றெல்லாம் கொலை அச்சுறுத்தல் விடுத்து, தனது பேஸ்புக்கின் ஊடாக குரல்பதிவை அனுப்புகின்றனர் என காரைதீவு பிரதேச சபையின் தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், “தற்பாதுகாப்புக் கருதி, குறித்த குரல்பதிவு உள்ளிட்ட சகலஆதாரங்களுடன், சம்மாந்துறைப் பொலிஸ் நிலையத்தில் நான் முறையிட்டுள்ளேன். இரகசியப் பொலிஸாரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

“அரசியல் காழ்ப்புணர்ச்சி கொண்டு, இனவாத விதையை விதைத்து, இன வன்மத்தை தூண்டிய எமது சபை முஸ்லிம் உறுப்பினர்கள் சிலர், தமது சமுகத்தின்முன் செல்லாக்காசாகி, தற்போது கூனிக்குறுகி நிற்கின்ற நிலை உருவாகியுள்ளது.

“இனியாவது இன நல்லிணக்கம், சகவாழ்வு, சமாதானம் என்ற நாமத்தோடு உலாவரும் அமைப்புகள் இப்படியான சந்தர்ப்பத்தில் உடனடியாகத் தலையிட்டு, உண்மை - பொய்யை அறிந்து, மக்களுக்கு சரியான தகவலை எடுத்தியம்ப வேண்டும். இன முறுகலை, இன வன்மத்தை தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்றார்.

கடற்றொழில் பாதிப்பு: 25 நாள்களாக

# கரைசேராத இரு மீனவர்கள்

■ எம்.ஏ.றமீஸ்

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் வீசிவரும் பலத்த காற்றுடனான வானிலை காரணமாக, கடற்றொழில் வெகுவாகப் பாதிப்படைந்துள்ளதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை, பலத்த காற்றின் காரணமாக, கடந்த 25 நாள்களுக்கு முன்னர் அட்டாளைச்சேனை பிரதேசத்தில் இருந்து ஆழ்கடல் மீன்பிடித் தொழிலுக்காகச் சென்ற மீனவர்கள் இருவர், இதுவரை திரும்பவில்லை என அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஒரிரு நாள்களுக்கு, இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் வாழும் மக்களும் கடற்றொழிலாளர்களும் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு, அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் மூலமாகவும் வழிமண்டலவியல் திணைக்களத்தின் மூலமாகவும் அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன.



படுகொலையின்

# 31ஆவது வருட நினைவு தினம்

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்



காத்தான்குடி, முதலாம் குறிச்சி மீரா பெரிய ஜும்ஆப்பள்ளிவாசல், மஸ்ஜிதுல் ஹுஸைனிய்யா பள்ளிவாசல் ஆகிய இரண்டிலும் 03.08.1990 அன்று தொழுகையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 103 முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இப்படுகொலையின் 31ஆவது வருட நினைவு தினம், நேற்று முன்தினம் (03) மாலை நடைபெற்றது. காத்தான்குடி முதலாம் குறிச்சி மீரா பெரிய ஜும்ஆப்பள்ளிவாசலில் அதன் தலைவர் மௌலவி எம்.ஐ.எம். ஆதம்லெவ்வை தலைமையிலும் மஸ்ஜிதுல் ஹுஸைனிய்யா பள்ளிவாசல் தலைவர் எம்.எஸ். எம்.சமீம் தலைமையிலும் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன.

நூறு நகரங்கள் அபிவிருத்தியில்

# வவுனியாவும் இணைந்தது

■ க. அகரன்



இலங்கையின் நூறு நகரங்களை அழகுபடுத்தும் திட்டத்தின் கீழ், வவுனியா நகரும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக, வவுனியா நகரசபை தவிசாளர் இ.கௌதமன் தெரிவித்தார்.

வவுனியாவில், நேற்று (04) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், இதற்காக ஒரு வருடத்துக்கு முன்பாகவே தாம் கள நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்ததாகவும் தற்போது சிலர் அரசியல் இலாபம் கருதி செயற்படுவதாகவும் கூறினார்.

அந்தவகையில், மணிக்கூட்டு கோபுர சந்தியில் இருந்து, தமிழ்மத்திய மகா வித்தியாலயம், பொது வைத்தியசாலை வரையான வீதி, பூங்கா வீதி ஆகியவற்றில் நடைபாதைகளை அமைத்தல், ஏ9 வீதிக்கு அருகாமையில் உபவீதி ஒன்றை அமைத்து, அதனோடு இணைந்தவாறான வாகனத் தரிப்பிடம் அமைப்பது தொடர்பாகவும் ஆராய்ந்திருந்தோம். இந்த வேலைத்திட்டங்கள் நிச்சயம் நடக்கும் எனவும் அவர் கூறினார்.

மாவட்ட அபிவிருத்தி குழு தலைவர் திலீபனுக்கும் இந்த திட்டம் தொடர்பாக தெரியப்படுத்தப்பட்டுள்ளது என்றும், அவர் தெரிவித்தார்.

இதேவேளை வவுனியா சுற்றுலாமைய குத்தகையாளர் நகர சபையின் நிபந்தனைகளை மீறியுள்ளாரெனத் தெரிவித்த அவர், தனக்கான ஓர் இடமாகவே அவர் அதனை மாற்றியுள்ளார். எனவே ஆளுநரின் அறிவுறுத்தலின் படி அவரது ஒப்பந்தம் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. இந்த மாதம் 31ஆம் திகதியுடன் அவரது ஒப்பந்தம் முடிவடைகின்றது. அதனுடன் அதனை நடத்துபவர் வெளியேற வேண்டிவரும் என்றார்.

இது தொடர்பாக நீதிமன்ற வழக்கும் இடம்பெற்று வருவதாகத் தெரிவித்த அவர், வழக்கு முடிவடைந்ததும் அதனை நகர சபையே பெற்று, சபை நிர்வாகத்தின் கீழ் செயற்படுத்தும் என்றும், தவிசாளர் தெரிவித்தார்.

# விபத்தில் ஒருவர் படுகாயம்

■ மு.தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி, பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புதுக்காட்டுச் சந்தி பகுதியில், நேற்று (04) காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கிளிநொச்சி நோக்கி சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிளொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து, வீதியின் அருகே உள்ள பெயர் பலகையில் மோதுண்டே, இவ்விபத்து சம்பவித்துள்ளது.

படுகாயமடைந்த நபர், பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.



கிளிநொச்சி குளத்தை

# சுற்றுலாத் தளமாக அபிவிருத்தி செய்யத் திட்டம்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி நகர மத்தியில் அமைந்துள்ள கிளிநொச்சி குளத்தை அபிவிருத்தி செய்து, அதனை சுற்றுலாத்தளமாக அமைப்பதற்கான திட்ட முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, அப்பகுதியில் நடைப் பயிற்சிக்கான வலயம், சிறுவர் பூங்கா, நீரில் பயணிக்கும் வகையிலான வசதி, பொழுதுபோக்கு வசதிகள், மின்னொளியூட்டல், வர்த்தக வசதிகள் உள்ளிட்ட விடயங்களை உள்ளடக்கி அபிவிருத்தி செய்வதற்கான திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது.

இதற்கான திட்டமிடலொன்று, இரணைமடு நீர்ப்பாசனப் பொறியியலாளர் செந்தூரனால், நேற்று (04), குறித்த குளத்தை பார்வையிட வந்த குழுவினரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

குறித்த திட்டமிடல், அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு, பின்னர், அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

குளத்தைச் சூழவுள்ள பகுதியில் அணை கட்டப்பட்டு, அதில் நடைப் பயிற்சிக்கான வசதிகள், இருக்கை வசதிகள் உள்ளடக்கிய முதல் கட்ட பணிகளுக்கு 110 மில்லியன் ரூபாய் செலவாகுமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.



முல்லைத்தீவில்

# அருட்தந்தைக்கு கொரோனா

■ செ. கீதாஞ்சன்

முல்லைத்தீவு நகரில், அருட்தந்தை ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

திங்கட்கிழமை (02) உண்ணாப்பிலவு பிரதேச வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது, நேற்று முன்தினம் (03) உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வண்ணாங்குளம் அந்தோனியார் தேவாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை ஆராதனையில் இவர் பங்கேற்றுள்ள நிலையில், ஆராதனையில் கலந்து கொண்டவர்களை தனிமைப்படுத்தும் நடவடிக்கையில் சுகாதார துறையினர் ஈடுபட்டுள்ளனர்.

பூநகரியில்


# மூன்று வீதிகள் புனரமைப்பு

■ நடராசா கிருஸ்ணகுமார்

கிளிநொச்சி, பூநகரியில், மூன்று வீதிகள் நிரந்தர வீதிகளாக புனரமைக்கப்பட உள்ளதாக, பூநகரி பிரதேச சபை உறுப்பினர் சி.சிறிரஞ்சன் தெரிவித்தார்.

இதற்கமைய, முழங்காவில் சிகாணு வீதி - 700 மீற்றர், குவேனி வீதி - 800 மீற்றர், அன்புபுரம் முதலாம் ஒழுங்கை மைதான வீதி - 1.2 கிலோ மீற்றர் ஆகிய வீதிகளே, இவ்வாறு புனரமைக்கப்படவுள்ளன.

குறித்த வீதிகள் புனரமைக்கப்படுவதன் மூலம், 1,000க்கும் மேற்பட்ட குடும்பங்கள் போக்குவரத்து நன்மையடையவுள்ளன என்றும், அவர் தெரிவித்தார்.



# ஆதன வரி பதிவுக்கு ஒத்தழைக்கவும்

■ செ. கீதாஞ்சன்


கரைதுறைப்பற்று பிரதேசத்துக்கு உட்பட்ட முல்லைத்தீவு பகுதியில், புள்ளிவிவரவியல் திணைக்களத்தால் ஆதன வரி தொடர்பிலான பதிவு நடவடிக்கை, நேற்று (04) தொடக்கம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக, கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் க.விஜிந்தன் தெரிவித்துள்ளார்.

எனவே, முல்லைத்தீவு நகர் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் உள்ள வீடுகளின் ஆதன வரி தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக மக்களின் வீடுகளுக்கு செல்லும் அதிகாரிகளுக்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்குமாறு, அவர் கேட்டுக்கொண்டார்.

ஹட்டனில் ஊதுபத்தி விற்கும் சிறுமிகளின்

# பின்னணியில் இருப்பது யார்?

## ஆராயுமாறு குழு நியமித்தார் இராதா எம்.பி



நிலமேகம் பிரசாந்த்

ஹட்டன் பஸ்தரிப்பிடம் உள்ளிட்ட இடங்களில், அண்மைக்காலமாக ஊதுபத்தி விற்பனையில் ஈடுபட்டுள்ள சிறுமிகள் யார்? என்பது தொடர்பாகவும், இவர்களை இவ்வாறு செய்யத் தூண்டும் நபர்கள் தொடர்பாகவும் ஆராயும் முகமாக, விசேட குழு அமைக்கப்பட்டுள்ளதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வே. இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

இது தொடர்பில் தெரிவித்த அவர், ஹிஷாலினி பிரச்சினை மலையகம் உட்பட, முழு இலங்கையையும் ஆட்டிப்படைத்துக் கொண்டு வருகின்றது. இந்நிலையில், தற்போது ஹட்டன் பஸ்தரிப்பிடத்தில், ஊதுபத்தி விற்கும் சிறுமிகள் தொடர்பில் அறியக்கிடைத்ததோடு, இவர்கள் விற்கும் ஊதுபத்திகள் அனைத்தும் ஒரே நிறுவனத்தின் பத்திகள் எனவும் முறைப்பாடு கிடைத்துள்ளன. எனவே, இவ்வாறு சிறுமிகளை வீதிக்கு அனுப்பி, ஊதுபத்தியை விற்பனை செய்யத் தூண்டுபவர்கள் தொடர்பிலும், குறித்த சிறுமிகள் தொடர்பிலும் முழு விவரங்களையும் ஆராய, நிதிச் செயலாளர் புஸ்பா விஸ்வநாதன் தலைமையில், விசேட குழு அமைக்கப்பட்டு உள்ளதாகவும் தெரிவித்தார்.

# சிறார்களின் எதிர்காலத்தை உறுதிப்படுத்துவோம்

## விழிப்புணர்வு வேலைத்திட்டம்

நவி



'சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர் உரிமைகள் மீறப்படுவதற்கு எதிராக குரல் கொடுப்போம்; சட்ட உதவியைப் பெற்று கொள்வோம்' என்ற தொனிப்பொருளில், கண்டி மனித அபிவிருத்தி தாபனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் கலாநிதி பி.பி.சிவப்பிரகாசத்தின் வழிக்காட்டாலுக்கு அமைய, விழிப்புணர்வு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தெல்தோட்டை பிரதேச செயலாளர் ஆத்மா திலுக்ஷி ஜயரத்ன, கலஹா பொலிஸ் நிலைய மகளிர் மற்றும் சிறுவர் பிரிவின் பொறுப்பதிகாரி ஆர்.ஏ.டி. ரணசிங்க ஆகியோர் இணைந்து இந்த வேலைத்திட்டத்தை நேற்று (4) தெல்தோட்டை நகரில் ஆரம்பித்து வைத்தனர்.

ஏழு நாள் வேலைத்திட்டத்தின் முதலாவது நிகழ்வைத் தொடர்ந்து, இவ்வேலைத் திட்டத்தை தோட்டங்களிலும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

சமிக்ஞை விளக்குகளால்

# அதிகரிக்கும் விபத்துகள்

பாலித ஆரியவன்ஸ

பதுளை, ரஜமஹா விகாரைக்கு முன்பாக உள்ள சுற்றுவட்டத்தில் பாரிய நிதியொதுக்கீட்டில் அமைக்கப்பட்டுள்ள வீதி சமிக்ஞை விளக்குகள், நீண்ட காலமாகியும் ஒளிரவிடப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று பிரதான வீதிகள் இந்த இடத்தில் இணைவதால் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்தவே வீதிச் சமிக்ஞை விளக்குகள் அமைக்கப்பட்டாலும், அவை ஒளிர்வதில்லை என்றும் இதனால் குறித்த இடத்தில் அதிக விபத்துகள் ஏற்படுவதுடன், பாதசாரிகளும் பல அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

இந்த விடயம் தொடர்பில், வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் வினவியபோது, குறித்த கட்டுமானப் பணிகளுக்கு சொந்தமான ஒப்பந்த நிறுவனம், இதனை வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்காமையே இதற்கான காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

எனினும், இந்த வீதி சமிக்ஞை விளக்குகள் பல மாதங்களுக்கு முன்னரே அமைக்கப்பட்டாலும் சில குறைபாடுகள் காரணமாக, இந்தத் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும், விரைவில் பணிகளை பூர்த்தி செய்து, வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிப்பதாக, ஒப்பந்த நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.



கிரிமிட்டிய கிராம உத்தியோகத்தருக்கு

# உரிய பயிற்சிகளை வழங்கவும்

## பிரதேசவாசிகள் கோரிக்கை

ஆ.ரமேஸ், டி.சந்ரு

நானுஓயா, இலக்கம் 476-ஏ கிரிமெட்டிய கிராம உத்தியோகத்தர், மக்கள் சேவை தொடர்பில், உரிய பயிற்சியின்றி செயற்படுவதாக பிரதேசவாசிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

குறித்த கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள 7 தோட்டங்களுக்குப் பொறுப்பாக, கடந்த 2 வருடமாக இந்த அதிகாரி செயற்பட்டாலும் இவரால் மக்களுக்குக் கிடைக்கும் சேவைகள் மிகவும் குறைவாக உள்ளதென தெரிவிக்கின்றனர்.

கொரோனா காலங்களில் இவ்வாறான அரச உத்தியோகத்தர்களின் சேவையை அரசாங்கம் முழுமையாக நம்பியிருக்கும் நிலையில், குறித்த அதிகாரியின் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் கொரோனாவால் தனிமைப்படுத்தப்பட்டவர்கள், தொற்றுக்குள்ளானவர்களுக்கு எவ்வித உதவியும் இவரால் வழங்கப்படவில்லை. அத்துடன், அரசாங்கத்தால் வழங்கப்படும் நிவாரணங்களைக் கூட, இவர் சரியாகப் பெற்றுக்கொடுப்பதில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பில், சுகாதார பரிசோதகர்களிடம் வினவியபோது, கிராம உத்தியோகத்தரே பிரதேச செயலகத்தின் ஊடாக, உதவிகளை மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இவரது சேவை திருப்தியின்மை தொடர்பில், நானுஓயா பொலிஸ் நிலையத்தில் பிரதேசவாசிகளால் 10 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# புதையல் தோண்டிய பத்து பேர் கைது

எம். செல்வராஜா

ஹப்புத்தளை, பிளக்வூட் தோட்டத்தில் புதையல் தோண்டிய பத்து பேர் நேற்று (4) பண்டாரவளை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பண்டாரவளை விசேட குற்றத்தடுப்பு பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய, சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், அவர்கள் புதையல் தோண்டுவதற்காகப் பயன்படுத்திய உபகரணங்கள், இரண்டு வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்களை பண்டாரவளை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



டிக்கோயாவில்

# நால்வருக்கு குளவிக்கொட்டு

எம்.கிருஸ்ணா

டிக்கோயா, வனராஜா சமர்வில் கீழ் பிரிவில் நால்வர் குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

நேற்று (4) கொழுந்து பறித்துக்கொண்டிருந்த இரண்டு பெண்களும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் இருவருமே இவ்வாறு குளவிக் கொட்டுக்கு இலக்காகினர்.

குளவிக்கொட்டுக்கு இலக்காகிய நால்வரும் டிக்கோயா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதுடன், பெண்கள் இருவரும் சிகிச்சை முடிந்து வீடு திரும்பியுள்ள நிலையில், வெளிக்கள உத்தியோகத்தர்கள் இருவரும் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.











# ஆர்ப்பாட்டங்கள்...

எஸ்.சதீஸ், எம். கிருஸ்ணா, நிலமேகம் பிரசாந்த்

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் வீட்டில் உயிரிழந்த டயகம சிறுமியின் மரணத்துக்கு நீதி கோரி, நேற்றும் (4) பூண்டுலோயா, பொகவந்தலாவை– கெர்க்கஸ்வோல்ட் ஆகிய தோட்டங்களில் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

மாத்தளையில்

# கொரோனாவால் 140 பேர் மரணம்

மஹேஸ் கீர்த்திரத்ன

கொரோனா தொற்றால் மாத்தளையில் இதுவரை 140 பேர் உயிரிழந்துள்ளனரென, மாத்தளை மாவட்ட சுகாதார பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும், கடந்த 24 மணித்தியாலத்துக்குள் மாத்தளை மாவட்டத்தில் 115 தொற்றாளர்கள் பதிவாகி உள்ளதுடன், இதுவரை 7,529 தொற்றாளர்கள் மொத்தமாகப் பதிவாகியுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் 1,504 தொற்றாளர்கள் உக்குவளை பிரதேசத்தில் பதிவாகி உள்ளதுடன், இரத்தோட்டையில் 841, மாத்தளையில் 557 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். தற்போது, மாத்தளை மாவட்டம் முழுவதும் 426 குடும்பங்களைச் சேர்ந்த 1,004 பேர் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளனர் என்றும் சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

இரத்தினபுரியில் கடந்த வருடம்

# 1,178 பேருக்கு எலிக்காய்ச்சல்

அஜித்லால் சாந்த உதய

இரத்தினபுரி மாவட்டத்தில் எலிக்காய்ச்சலால் பீடிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதாக, இரத்தினபுரி மாவட்ட தொற்றுநோய் விசேட வைத்தியர் லக்மால் கோனார தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், இரத்தினபுரி சுகாதார வைத்திய பிரிவுகள் 19இல், இதுவரை 344 பேர் எலிக்காய்ச்சலால் உயிரிழந்துள்ளனர். இதற்கமைய, பெல்மடுல்ல, நிவித்திகல, கலவான, கிரிஎல்ல, எலபாத ஆகிய பகுதிகளில் இந்த மரணங்கள் பதிவாகியுள்ளன என்றார்.

கடந்த வருடம் எலிக்காய்ச்சல் அதிகரித்த மாவட்டமாக இரத்தினபுரி மாவட்டம் சுட்டிக்காட்டப்பட்டது. இதில் 35 பேர் பலாங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர்.

எலிக்காய்ச்சலால் பீடிக்கப்படுபவர்களில் 99 சதவீதமானவர்கள் மண் சார்ந்த தொழில்களுடன் ஈடுபடுபவர்கள் என்றும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், வயல் நிலங்களில் பட்டம் விடும் சிறுவர்கள், வெள்ளத்தின் பின்னர் வீடுகளைச் சுத்தம் செய்பவர்கள், காடுகளில் பயிற்சிகளில் ஈடுபடும் இராணுவம், பொலிஸார், கீரைத் தோட்டங்களில் வேலைசெய்பவர்கள் போன்றவர்களே பெரும்பாலும் எலிக்காய்ச்சலால் பீடிக்கப்படுவதாகவும் தெரிவித்த அவர், கடந்த வருடம் மாத்திரம் இரத்தினபுரி மாவட்டத்தில் 1,178 பேருக்கு எலிக்காய்ச்சல் பீடித்ததாகவும் தெரிவித்தார்.



# உள்ளக வீதி புனரமைப்பு

சுதத் எச்.எம்.ஹேவா

ஹட்டன்-டிக்கோயா நகரசபைக்குரிய தரவளை தோட்டம் ஊடாக, ஹட்டன் காமினிபுர பகுதிக்குச் செல்லும் உள்ளக வீதியைப் புனரமைக்கும் பணிகள், ஹட்டன்- டிக்கோயா சபையின் தவிசாளர் சடையன் பாலச்சந்திரனால் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

24 மில்லியன் ரூபாய் செலவில் வீதி அபிவிருத்தி அதிகார சபை ஊடாக இந்தப் பணிகள் முன்னெடுக்கப்படுவதாக தவிசாளர் தெரிவித்துள்ளார்.



வியாழக்கிழமை, 5 ஒகஸ்ட் 2021 தமிழ்Mirror

# சுனாமிப் பேரலையாய் கொரோனா தாண்டவமாடும் அபாயம்!

கண் இமைகளைச் சிமிட்டும் நொடிப்பொழுதில், கரை நீரை அப்படியே பல மீற்றர் தூரத்துக்கு உள்ளீர்த்து, வேண்டிக்கை பார்க்கச் சென்றவர்கள் உட்பட, பலரையும் அடுத்த பேரலையில் காவு கொண்ட 'சுனாமி'யின் ஞாபகங்களை மீட்டும்போதெல்லாம் மயிர்சிலிர்க்கும்! அந்தளவுக்கு அகோரமானது.

எவ்விதமான முன்சமிக்ஞைகளையும் காண்பிக்காது, ஒருசில நொடிகளுக்குள் உலகின் கரையோரங்களைச் சூறையாடிச் சென்ற சுனாமிப் பேரலையைப் போன்றே, 'கொரோனா பேரலை' உருவாகுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஆகையால், இன்னுமே அசட்டையாக இருந்துவிடக்கூடாது.

மாலை வேளையில் வெளியாகும் அறிவித்தல்களில், கொரோனா தொற்றாளர்கள், மரணமடைந்தோர் எண்ணிக்கைகள், முன்னைய நாள்களை விடவும் அதிகரித்துகொண்டே செல்கின்றது. இதற்கிடையில், தடுப்பூசியை ஏற்றிக்கொள்வோரின் புள்ளிவிவரத் தகவல்களும் ஏறுமுகத்தில் செல்கின்றன.

கொரோனா வைரஸ் தொற்றாளர்கள், கொரோனா மரணங்கள், கொரோனாவை தடுத்தாட்கொள்வதற்கான தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளுதல் இவை, மூன்றுமே ஏறுமுகத்தில் செல்வதால், ஏற்றிக்கொண்ட தடுப்பு மருந்து பயனற்றதாகிவிடுமோ என்றோர் அச்சமும் ஆட்கொள்ளாமல் இல்லை.

இதற்கிடையில், நாடளாவிய ரீதியிலுள்ள பல வைத்தியசாலைகளில் கொரோனா தொற்றாளர்களின் கொள்ளளவு, விஞ்சி நிற்கிறது. கொழும்புக்கு வெளியே கொரோனா மத்திய நிலையங்களாக இருக்கும் சிகிச்சை நிலையங்களின் பகுமுகக்கூடத்தில் வைத்து, சிகிச்சையளிக்கப்படும் காட்சிகள் அடங்கிய புகைப்படங்கள் மனப்பிராந்தியை ஏற்படுத்தி நிற்கின்றன.

கொரோனா தொற்றால் மரணமடைந்தவர்களில், தடுப்பூசியை செலுத்திக்கொண்டவர்கள் அல்லது இரண்டு டோஸ்களையும் செலுத்திக்கொண்டவர்கள் இருக்கின்றனரா என்பதுபோன்ற தகவல்கள் வெளியாகவில்லை. இதுவரையிலும் ஒரு தடுப்பூசியையேனும் செலுத்திக்கொண்டவர்கள் நிம்மதிப் பெருமூச்சு விடுவர்.

அவ்வாறான தகவல்கள் வெளிவராத வரையிலும் மனநிம்மதி. இல்லையேல், தடுப்பூசியை செலுத்திக்கொண்டவர்களின் மனங்களிலும் பயம் தொற்றிக்கொள்ளும். இவற்றுக்கெல்லாம் ஒவ்வொருவரும் பதில் சொல்லவேண்டியவர்களாக நிற்கின்றோம்.

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து தற்காத்துக்கொள்வதற்காக முன்வைக்கப்பட்டிருக்கும் வழிகாட்டல்களை அச்சொட்டாகப் பின்பற்றுபவர்கள் எத்தனை பேருளர்? கொரோனா தொற்றின் ஆரம்பத்தில், வீட்டிலிருந்து வெளியேறும் போதும் வீட்டுக்குள் நுழையும்போதும், பின்பற்றிய சுகாதார வழிகாட்டல்களை அவ்வாறே, அச்சொட்டாக இன்னும் பின்பற்றுகின்றவர்கள் எத்தனை பேர் இருக்கின்றனர்?

பொருள்களைக் கொள்வனவு செய்து கொண்டு, வீட்டுக்குள் நுழையும் போது, பலரும் முழு உடம்பையும் கழுவிவிட்டே நுழைவர். மிகுதிப் பணத்தையும் கிருமிதொற்று நாசினியால் கழுவுவர்; எடுத்துச் சென்ற பைகளையும் வீட்டுக்கு வெளியே வைத்துச் சுத்தப்படுத்துவர்.

ஆனால், கொரோனாவின் தொற்றுவேகம் சடுதியாக அதிகரித்து இருக்கும் நிலையில், 'கொரோனாவாவது கொக்காவது' எனும் நினைப்பிலேயே பலரும் சுற்றித்திரிகின்றனர். இந்நிலைமையால், கொரோனா சுனாமி அலையொன்று உருவெடுப்பது வெகுதொலைவில் இல்லை.

அன்றாடம் முன்னெடுக்கப்படும் சிகிச்சைகள் பலவற்றை, அநேக வைத்தியசாலைகள் நிறுத்திவைத்துள்ளன. அவசர சிகிச்சைப் பிரிவுகள், கொரோனா வைரஸ் தொற்றாளர்களால் நிரம்பி வழிகின்றன. ஆகையால், சுகாதார வழிமுறைகளைக் கடுமையாகப் பின்பற்றுவதே, யாவருக்கும் நன்மை பயக்கும்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


'அரந்தலாவ படுகொலை' விசாரணைகள்:

# ராஜபக்ஷர்களின் புதிய திட்டம்



புருஜோத்தமன் தங்கமயில்

குற்றப்புலனாய்வுத் திணைக்களம், 'அரந்தலாவ படுகொலை' தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக, சட்டமா அதிபர் திணைக்களம், உயர்நீதிமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (03) அறிவித்திருக்கின்றது.

1987ஆம் ஆண்டு, ஜூன் இரண்டாம் திகதி, அம்பாறை, அரந்தலாவ பகுதியில் வைத்து, இளம் பிக்குகள் அடங்கிய 33 பேர் படுகொலை செய்யப்பட்டனர். இந்தப் படுகொலையை, தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்டதாக, அரசாங்கம் குற்றஞ்சாட்டி வந்திருக்கின்றது.

இந்த நிலையில், குறித்த படுகொலைச் சம்பவத்தில், மயிரிழையில் உயிர்தப்பிய ஒருவர் தொடர்ந்த வழக்கின் அடிப்படையிலேயே, 34 வருடங்களுக்குப் பிறகு, அரந்தலாவ படுகொலை தொடர்பிலான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சுதந்திரத்துக்கு முன்னும் பின்னும், இலங்கையில் திட்டமிட்ட இனவன்முறைகள், கலவரங்கள், படுகொலைகள், வன்முறைச் சம்பவங்கள் என்று தொடர்ச்சியாக இடம்பெற்று வந்திருக்கின்றன.

1915இல் கண்டியில் ஆரம்பித்து, தென் இலங்கை பூராவும் பரவிய சிங்கள - முஸ்லிம் கலவரம் தொடங்கி, 2018இல் கண்டி, திகனவில் இடம்பெற்ற முஸ்லிம்களுக்கு எதிரான திட்டமிட்ட வன்முறைகள் வரையில், 'கறுப்பு' வரலாற்றை நாடு கொண்டிருக்கின்றது.

1958, 1977களில் தமிழ் மக்களுக்கு எதிராக, பௌத்த சிங்களப் பேரினவாதம், தனது அரசியலின் பிரதான அம்சமாக, அடக்குமுறையைப் பயன்படுத்திக் கொண்டது. நாட்டுக்காக உழைத்து, ஓடாய்த் தேய்ந்த மலையக மக்களை, அவர்களின் வாழ்விடங்களில் இருந்து துரத்தியடித்த சிங்களப் பேரினவாதம், அதே பாணியிலான அடக்குமுறையை கொழும்பிலும் அதை அண்மித்த பகுதிகளிலும் வாழ்ந்த தமிழ் மக்களுக்கு எதிராக, 1983ஆம் ஆண்டு திட்டமிட்ட கலவரமாக 'கறுப்பு ஜூலை'யை அரங்கேற்றி, குருதி குடித்தது. அத்தோடு, வடக்கு - கிழக்கில் தன்னுடைய கொடுங்கரங்களை நீட்டத் தொடங்கியது. 2009இல் முள்ளிவாய்க்கால் பேரழிவு, அதன் உச்சமாக அமைந்தது.

நாட்டில் இனமுரண்பாடுகள் என்கிற பெயரில், திட்டமிட்ட இனவன்முறைகள் அரங்கேற்றப்பட ஆரம்பித்தது முதல், அனைத்துச் சமூகங்களுக்குள்ளும் இருந்தும், மனித மாண்புகளுக்கு எதிரான படுகொலைகள் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, புல்லுமலைப் படுகொலைகள், தங்கவேலாயுதபுரம் படுகொலைகள், அரந்தலாவ படுகொலைகள், சத்துருக்கொண்டான் படுகொலைகள், காத்தான்குடி படுகொலைகள், நவாலி தேவாலய படுகொலைகள், நாகர்கோவில் பாடசாலைப் படுகொலைகள், கெப்பட்டிக்கொல்லாவ படுகொலைகள், செஞ்சோலைப் படுகொலைகள் என்று படுகொலைச் சம்பவங்களின் எண்ணிக்கை கணக்கில் அடங்காதவை.

இவ்வாறான படுகொலைகள் தொடர்பில், அது இடம்பெற்ற காலத்திலும் சரி, அதன் பின்னரும் சரி, நீதியான விசாரணைகள் ஏதும் இடம்பெற்றிருக்கவில்லை. அதிக தருணங்களில், அந்தப் படுகொலையைப் புரிந்த தரப்புகள், அந்தப் படுகொலைகளில் கொல்லப்பட்ட மக்களைப் பயங்கரவாதிகளாகவே சித்திரித்திருக்கின்றன. ஆனால், அங்கு இன- மத பேதமின்றி, அப்பாவி மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கான நீதி என்பது, என்றைக்குமே கிடைக்காத ஒன்றாகவே இருந்திருக்கின்றது.

இந்தப் படுகொலைகளின் சாட்சிகள், இன்றைக்கும் நடைப்பிணங்களாக இருக்கிறார்கள். படுகொலைகளைப் புரிந்தவர்களும் அவர்களை ஏவியவர்களும் கூட, இன்றைக்கும் இருக்கிறார்கள்.

முள்ளிவாய்க்கால் இறுதி நாள்களில், தங்களது உறவுகளைப் பாதுகாப்புத் தரப்பிடம் கையளித்தவர்கள், 12 ஆண்டுகளுக்கும் மேலாக, அவர்களைத் தேடி அலைகிறார்கள்; வீதிகளில் காத்திருக்கிறார்கள்; நீதிமன்றங்களின் படிகளிலும் ஏறுகிறார்கள். ஆனால், அவர்களுக்கான பதில் சூனியமாகவே இருக்கின்றது. அப்படி அலைந்து திரிந்த பல தாய்மாரும் தந்தைமாரும், நோய்வாய்ப்பட்டு இறந்திருக்கிறார்கள். இவையெல்லாம் நாளாந்த கட்சிகளாக, வடக்கு - கிழக்கில் அரங்கேறி வருகின்றன.

இவ்வாறான கட்டத்தில்தான், அரந்தலாவ படுகொலைகள் தொடர்பிலான விசாரணைகள் மீள ஆரம்பிக்கப்பட்டு இருக்கின்றன. மனித குலத்துக்கு எதிரான எந்தவொரு நிகழ்வையும் அனுமதிக்க வேண்டியதில்லை. அவற்றுக்கு எதிரான நீதி என்பது, உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதுதான், அவ்வாறான குற்றங்கள் மீள நிகழாது இருப்பதை உறுதி செய்யும்.

ஆனால், தற்போது அரந்தலாவ படுகொலைகள் தொடர்பிலான விசாரணைகள் மீள ஆரம்பிக்கப்பட்டு இருப்பதை, நீதிக்கான தேடலாக மட்டும் கொள்ள முடியவில்லை என்பதுதான் இங்குள்ள முக்கிய விடயம்.

ராஜபக்ஷர்கள் எனும் பெரும் கப்பல், தென் இலங்கையின் எதிர்பார்ப்புகளை எல்லாமும் பொய்ப்பித்துக் கொண்டு மூழ்கிக் கொண்டிருக்கின்றது. அப்படியான நிலையில், ராஜபக்ஷர்கள் வழக்கமாகக் கையாளும் இன, மத அடிப்படைவாதத்தை முன்னிறுத்திக் கொண்டு, தப்பித்துக் கொள்ளலாம் என்ற நோக்கில் முயற்சிப்பதாகக் கொள்ளலாம்.

நல்லாட்சிக் காலத்தில், அரசாங்கத்துக்கு எதிராக வீதியில் இறங்கிய ராஜபக்ஷ ஆதரவு தொழிற்சங்கங்களில் அநேகமானவை, இன்றைக்கு ராஜபக்ஷர்களுக்கு எதிராகவே வீதியில் இறங்கி இருக்கின்றன. கொவிட்-19 பெருந்தொற்றுக் காலத்தில், அனைத்துத் தரப்பினரும் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்ற நிலையில், ராஜபக்ஷர்களுக்கு ஆதரவாகக் கடந்த காலத்தில் வீதிகளில் இறங்கிய தரப்பினரும், இன்றைக்கு அவர்களுக்கு எதிராகவே வீதியில் இறங்கியிருப்பது, தென் இலங்கையின் ஒட்டுமொத்த மனநிலையையும் வெளிப்படுத்துகின்றது.

குறிப்பாக, ராஜபக்ஷர்களுக்காக பௌத்த விகாரைகளுக்கு ஊடாக, பெரும் பிரசாரங்களை முன்னெடுத்த பௌத்த மகாசங்கங்களும் தலைமைப் பிக்குகளும், ராஜபக்ஷர்களுக்கு எதிராகவே இன்றைக்குத் திரும்பியிருக்கின்றனர்.

அவ்வாறான நிலையில்தான், 34 வருடங்களுக்கு முன்னரான பௌத்த பிக்குகள் படுகொலை செய்யப்பட்ட அரந்தலாவ படுகொலை விசாரணைகள், மேலெழுந்திருப்பதைக் கொள்ள வேண்டியிருக்கின்றது. அதன்மூலம், பௌத்த மகாசங்கங்களை ஒரு வகையில் கையாளலாம் என்பது, ராஜபக்ஷர்களின் எதிர்பார்ப்பாக இருக்கலாம்.

ராஜபக்ஷர்கள் மீது மாத்திரமல்ல, அவர்களின் அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையும் மக்கள் மத்தியில் மாத்திரமல்ல, அரச பங்காளிகளிடமும் இழக்கப்பட்டு விட்டது.

அரச பங்காளிகள், புதிய அரசியல் தலைமையை நோக்கி நகர்வதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். 2015இல் மைத்திரிபால சிறிசேனவை முன்னிறுத்திக் கொண்டு எழுந்த அணி போன்றதொரு நிலையை, மீண்டும் உருவாக்கலாம் என்ற யோசனையோடு முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

மங்கள சமரவீர, குமார வெல்கம உள்ளிட்ட தரப்புகள், பண்டாரநாயக்க குடும்பத்திலிருந்து ஒருவரை, மீண்டும் அரசியலுக்கு அழைத்து வருவதன் மூலம், ராஜபக்ஷர்களை அரங்கிலிருந்து சிறிய காலத்துக்காவது அகற்றலாம் என்று சிந்திக்கிறார்கள்.

குறிப்பாக, சந்திரிகா குமாரதுங்கவின் மகனை, 'கற்ற கனவான்' மற்றும் 'பரம்பரை அரசியல்வாதி' என்கிற அடையாளங்களோடு தென் இலங்கையில் முன்னிறுத்தும் சூழல் உருவாகி இருக்கின்றது.

அவ்வாறானதொரு சந்தர்ப்பம் எழுந்தால், பண்டாரநாயக்க குடும்பத்தை நோக்கி, மகா நாயக்க பீடங்கள் செல்லும் வாய்ப்புகள் உண்டு. குறிப்பாக, கண்டிச் சிங்கள பீடங்கள், தங்களது பிடியை மீண்டும் பண்டாரநாயக்க குடும்பத்தினூடாக நிறுவலாம் என்றும் யோசிக்கலாம்.


பௌத்த பீடங்கள் மீது, ராஜபக்ஷர்கள் போல வேறெந்தத் தரப்பும் எப்போதுமே ஆளுமை செலுத்தியதில்லை. தங்களது நிலைப்பாடுகளை விமர்சிக்கின்ற தருணங்களில், பௌத்த பீடங்களுக்குள்ளேயே பிளவுகளை ஏற்படுத்தும் அளவுக்கான ஏற்பாடுகளை ராஜபக்ஷர்கள் அவர்களின் முதல் ஆட்சிக் காலங்களில் செய்திருக்கிறார்கள்.

அவ்வாறானநிலை, ராஜபக்ஷர்களின் ஆட்சி, காலவரையறையின்றி தொடர்ந்தால், மீண்டும் உருவாகலாம் எனும் நிலையில், பண்டாரநாயக்க குடும்பத்தை நோக்கி ஆதரவுக் கரத்தை, பௌத்த பீடங்கள் நீட்டுவது இயல்பானது.

அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் யார் என்கிற கேள்வி, ராஜபக்ஷ குடும்பத்துக்குள் தலையெடுத்து விட்டது. கோட்டாபய ராஜபக்ஷ, "மீண்டும் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுவேன்" என்று அண்மையில் அறிவித்திருக்கின்றார். அவரது இளைய சகோதரரான பசில் ராஜபக்ஷ, 2024ஐ தன்னுடைய ஜனாதிபதிக்கான பயணமாகக் கட்டமைக்கின்றார்.

இன்னொரு பக்கம், மஹிந்த ராஜபக்ஷவுக்குத் தன்னுடைய மூத்த மகனான நாமலின் எதிர்காலம் குறித்த பயம் தொற்றிக் கொண்டிருக்கின்றது. அப்படியான முரண்பாடுகள், ராஜபக்ஷர்களுக்கு இடையில் உருவாகியிருக்கும் நிலையில், பண்டாரநாயக்க குடும்ப வாரிசு பற்றிய அச்சம், அவர்களுக்கு எழுவது இயல்பானது.

அந்தவொரு நிலைமையைக் கையாள்வதற்கான ஒரு கருவியாக, அரந்தலாவ படுகொலை விசாரணை விடயம், தென் இலங்கையில் மேலே கொண்டுவரப்பட்டு இருக்கின்றது என்றும் கொள்ளலாம். காலம் தன்னுடைய பதிலைச் சொல்லும்.



## வாழ்வியல் தரிசனம்

தவறுகளைத் தொடர்ந்தும் செய்வேன் எனக் கங்கணம் கட்டுபவர்கள், தங்களைத் தாங்களே சித்திரவதைக்கு உள்ளாக்கி, அழிந்தே போய்விடுவார்கள். பலகோடி மக்கள் வாழும் பூமி இது.

ஆனால், இத்தகையவர்களின் செயல்களால், மக்கள் படும் அவஸ்தைகள் சொல்லில் அடங்காதன. கல்லூரிகள், வழிபாட்டுத்தலங்கள், மக்கள் கூடும் இடங்களில் பயங்கரவாத நடவடிக்கைகள் நடக்கும் போது, ஏற்படும் இழப்புகள் ஏராளம், ஏராளம்.

இவற்றைத் தவிர்க்க முடியாது நாடுகள் கலங்குகின்றன. அமைதி பலருக்கும் பிடிப்பதில்லை. கொலைஞர்கள் தங்களைப் போன்றவர்களை உருவாக்குவதில் தீவிரமாக இருக்கின்றனர்.

இவர்கள், தீவிரவாதம் எது, நற்செயல் எதுவெனத் தெரியவே தெரியாது வாழ்கின்றனர். தாய், தந்தை, சகோதரர், உற்றம் சுற்றத்துடன் இணைந்தவர்கள் கூட, இரக்கமற்ற விசம் ஊறிய கொடூர மனம் படைத்வர்களாக எப்படி உருவாகினார்கள்?

அகண்ட பூமியில் அடங்காத மனிதர் இவர்கள்; அன்பு, மனிதநேயம், இரக்கம் போன்றவை இன்மையால், பூமிக்கு துன்பம் இருந்தபடியே உள்ளது. காலம் மாறும் பார்ப்போம்.

பருத்தியூர் பால- வைரவநாதன்

## கடிதங்கள்

ஒட்டமாவடி, ரஹ்மத் நகர் பகுதியில்

### பீதி தரும் வீதி

கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச சபைக்கு உட்பட்ட ரஹ்மத் நகர் பகுதியிலுள்ள பல வீதிகள், பயணிக்க முடியாத நிலையில் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மழை வெள்ளம் அடித்துச் செல்லப்பட்டதால் குறித்த வீதிகள் உடைந்தும் சிதைந்தும் காணப்படுகின்றன. நீண்ட காலமாக, புனர்நிர்மாணம் செய்யப்படாமல், கவனிப்பாரற்ற நிலையில் காணப்படும் இந்த வீதிகளைப் பயன்படுத்துவோர், பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக, அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், குறித்த வீதிகளிலுள்ள மின்கம்பங்களில் பொருத்தப்பட்ட மின்குமிழ்கள், பல வருடங்களாகப் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றன. இதன் காரணமாக, இரவு நேரங்களில் அவசர தேவைகளுக்காகக்கூடப் பயணிப்பது, உயிராபத்து மிகுந்ததாகக் காணப்படுகின்றது. அத்துடன் வேறு பிரதேசங்களில் இருந்து வருவோர், குறித்த வீதிகளின் குழிகளில் விழுந்து விபத்துக்குள்ளாகி, படுகாயமடைந்து செல்வதும் வழமையான சம்பவங்களாகக் காணப்படுகின்றன.

எனவே, இவ்விடயம் தொடர்பாக ஓட்டமாவடி பிரதேச சபை நிர்வாகத்தினர் கவனமெடுத்து, குறித்த வீதிகளைப் புனர்நிர்மாணம் செய்து, மின்விளக்குகளைப் பொருத்தித் தருமாறு, பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

எச்.எம்.எம். பர்ஸான்





சென்னை:

# ‘மக்களைத் தேடி மருத்துவம்’

## தமிழகத்தின் மகத்தான திட்டம் இன்று ஆரம்பம்



தமிழகத்தில் நீரிழிவு நோய், இரத்த அழுத்தம், சிறுநீரக செயலிழப்பு போன்ற நோய்களால் 20 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் அரச வைத்தியசாலைகளை நாடுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், நோயாளிகளில் பலர் முறையாகச் சிகிச்சை எடுத்துக் கொள்ளாததால், ஆண்டுக்கு சராசரியாக 5 இலட்சம் பேர் மரணம் அடைகின்றனர்.

இதனைக் கருத்தில்கொண்டு தமிழகத்தில் ‘மக்களைத் தேடி மருத்துவம்’ என்ற மகத்தான திட்டத்தை அரசு செயற்படுத்த உள்ளது.

இத்திட்டத்தை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள கிராமப் பகுதியில் இன்று (05) ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இதன் மூலம், நோயாளிகளைத் கண்டறிந்து, வீடு வீடாகச் சென்று அவர்களுக்கு மாதந்தோறும் தேவையான மருந்துகள் மற்றும் சிகிச்சைகளை வழங்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை:

## தனுஷ் தொடர்ந்த வழக்கின் தீர்ப்பு இன்று



வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சொகுசு காருக்கு விதிக்கப்பட்ட நுழைவு வரியை எதிர்த்து நடிகர் விஜய் சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இவ் வழக்கை விசாரித்த நீதிபதி எஸ். எம். சுப்பிரமணியம் அதனைத் தள்ளுபடி செய்ததுடன் ரூபாய் 1 இலட்சம் அபராதமும் விதித்திருந்தார். இவ்வழக்கு தமிழகத்தில் பெரும் பரபரப்பை உண்டாக்கியது. இதையடுத்து நடிகர் விஜய் மேல்முறையீடு செய்து தனக்கு விதிக்கப்பட்ட அபராதத்துக்குத் தடை உத்தரவு பெற்றுள்ளார்.

இந்நிலையில், 2015ஆம் ஆண்டு வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சொகுசுக் காருக்கு விதிக்கப்பட்ட ரூபாய் 60.66 லட்சம் நுழைவு வரியை எதிர்த்து, நடிகர் தனுஷ் வழக்குத் தொடர்ந்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், நுழைவு வரியில் 50 சதவீதத்தை செலுத்தும்படி தனுசுக்கு 2016ஆம் ஆண்டு உத்தரவிட்டது. இதன்படி அவர் 50 சதவீத வரித் தொகையைச் செலுத்தி, தன்னுடைய சொகுசுக் காரைப் பதிவு செய்து கொண்டார்.

இந்நிலையில், நீதிபதி எஸ்.எம். சுப்பிரமணியம் முன்பு நேற்று வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்போது இரு தரப்பிலும் சட்டத்தரணிகள் வருகை தராமையால் வழக்கின் தீர்ப்பை இன்று (05) ஒத்திவைப்பதாக நீதிபதி அறிவித்துள்ளார்.

சிவகங்கை:

## கவிச்சக்கரவர்த்தி கம்பர் நினைவிடத்தின் அவலம்

கம்பர் எழுதிய இராமாயண காவியத்தை உலகமே போற்றுகிறது. ஆனால், சிவகங்கை மாவட்டம் நாட்டரசன்கோட்டை அருகே அமைந்துள்ள கம்பரின் சமாதியோ பராமரிப்பின்றிக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

1,000 ஆண்டுகள் பழைமையான மேற்படி நினைவிடம் தற்போது பெயரளவுக்கு மட்டுமே உள்ளதாகவும், வரலாற்றுப் பின்புலம்கொண்ட கம்பர் கோவிலில் அவரின் புகழைப் போற்றும்வகையில் அரசு சார்பில் எந்த விழாக்களும் நடத்தப்படுவதில்லை எனவும் இதனால், இப்பகுதியில் வாழும் இளைய சமுதாயத்தினர் மத்தியில் கம்பரைப் பற்றித் தெரியாத சூழல் நிலவுகிறது எனவும் கம்பர் சமாதி அமைந்துள்ள பகுதிக்குச் செல்லும் சாலை மிகவும் மோசமான நிலையில் உள்ளதாகவும் கூறப்படுகிறது.

புனித குளமாகக் கருதப்பட்ட கம்பன் குளம் பராமரிப்பு இல்லாததால், சிதிலமடைந்து காணப்படுகிறது. மேலும் தனியார் பராமரிப்பில் உள்ள இக்கோவில் சுற்றுச்சுவர் இடிந்துவிழும் நிலையில் உள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இந்நிலையில் “சிவகங்கை மாவட்டச் சுற்றுலாத் தலங்கள் பட்டியலில் கம்பன் நினைவிடத்தையும் சேர்த்து, அதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்; சுற்றுலாப் பயணிகள் வந்து செல்லும் அளவுக்குச் சாலை உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும். கம்பன் குளத்தைச் சீரமைக்க வேண்டும்” என்பதே இப்பகுதியைச் சேர்ந்தவர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்களின் கோரிக்கையாக உள்ளது.



தமிழகம்:

## மீன் குழம்பால் வந்த தகராறு



ஆடிக் கிருத்திகை நாளில் மனைவி மீன் குழம்பு வைத்ததால் ஏற்பட்ட வாக்குவாதத்தைத் தொடர்ந்து மனைவி தாக்கப்பட்டும், கணவன் தன்னுயிரை மாய்த்துக் கொண்ட சம்பவமொன்று தமிழகத்திலுள்ள கொரட்டூர் எனும் இடத்தில் இடம்பெற்றுள்ளது.

தமது பெற்றோருக்கு இடையில் இவ்விடயம் தொடர்பாக வாக்குவாதம் ஏற்பட்டதைத் தொடர்ந்து மகன்கள் இருவரும் தாயின் சகோதரியின் வீட்டுக்குச் சென்றுள்ளனர்.

பின்னர் மீண்டும் இரவு 10 மணி அளவில் இருவரும் வீட்டுக்குத் திரும்பி வந்துள்ளனர். அப்போது தமது தந்தை பிணமாகக் கிடந்ததையும், தாய் தலையில் பலத்த காயங்களுடன் மயங்கிய நிலையில் கிடந்ததையும் பார்த்து அதிர்ச்சி அடைந்து கூச்சலிட்டுள்ளனர்.

சத்தம் கேட்டு அங்கு வந்த உறவினர்கள், அயலவர் உடனடியாகப் பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் தெரிவித்ததைத் தொடர்ந்து அங்கு விரைந்த பொலிஸார் குறித்த நபரின் பிரேதத்தை பரிசோதனைக்காக அரசு மருத்துவனைக்கு அனுப்பி வைத்ததோடு படுகாயத்துடன் கிடந்த மனைவியை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுதொடர்பான விசாரணையில், மீன் குழம்பு வைத்தது தொடர்பாக இருவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டதாகவும் இதில் ஆத்திரம் அடைந்த குமார், மனைவி துர்காவை அருகில் கிடந்த கம்பியால் தலையில் ஓங்கி அடித்ததாகவும், அதில் மயக்கமடைந்து கீழே விழுந்த அவரை, இறந்துவிட்டதாக நினைத்து பயந்து போன குமார், தன்னுயிரை மாய்த்துக் கொண்டதும் தெரியவந்தது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்திய வம்சாவளி சிறுமி

## உலகின் மிகச்சிறந்த மாணவராகத் தெரிவு



உலகின் மிகச் சிறந்த மாணவர்களில் ஒருவராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த நடாஷா பெரி என்னும் சிறுமியை ஜோன்ஸ் ஹொப்கின்ஸ் பல்கலைக் கழகம் தெரிவுசெய்துள்ளது.

நியூஜெர்சியில் உள்ள பாடசாலையில் 5ஆம் வகுப்புப் படித்து வரும், 11 வயதான மேற்படி மாணவி குறித்த பல்கலைக்கழகத்தின் 2020 - 21 இளம் திறமையாளர்கள் தேடல் மையத்தில் பதிவு செய்திருந்த சுமார் 19,000 மாணவர்களில் ஒருவராவார்.

இவர், அமெரிக்காவின் கல்வி ஊக்கத் தொகை தகுதித் தேர்வு, அமெரிக்க கல்லூரி நுழைவுத் தேர்வு ஆகிய தேர்வுகளில் வெளிப்படுத்தியுள்ள திறமையை அடிப்படையாகக் கொண்டு, உலகின் தலைசிறந்த மாணவர்களில் ஒருவராக, இப்பல்கலைக்கழகம் இவரைத் தெரிவுசெய்துள்ளது.

தற்போது 5ஆம் வகுப்புப் படித்து வந்தாலும், தகுதித் தேர்வுகளில் அவர் அளித்த பதில்கள் எட்டாம் வகுப்புப் படிக்கும் மாணவர்களுக்கு இணையான திறன்களைக் கொண்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பொலிஸ் தடுப்புக் காவலில் 348 பேர் உயிரிழப்பு

இந்தியாவில் கடந்த 3 ஆண்டுகளில் பொலிஸ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த 348 பேர் உயிரிழந்துள்ளனர் என மத்திய உள்துறை அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது, இந்தியாவில் 2018-19 ஆம் ஆண்டுகளில், பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த 136 பேர் உயிரிழந்தனர். சித்திரவதைக்கு ஆளானோர் எண்ணிக்கை 542 பேர்.

அத்துடன், 2019-20ஆம் ஆண்டில் இவ்வாறு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு மரணமடைந்தோர் எண்ணிக்கை 112 ஆகவும், சித்திரவதை செய்யப்பட்டவர்கள் எண்ணிக்கை 411 ஆகவும் காணப்பட்டது. அதுபோல 2020-21 ஆம் ஆண்டில் மரணமடைந்தோர் எண்ணிக்கை 100 ஆகவும், சித்திரவதைக்கு ஆளானோர் 236 ஆகவும் உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ். எம்.பிகள் குறித்து தீர்மானம் வேண்டும்

பா.நிரோஸ்



யாழ். தேர்தல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை தொடர்பில் அரசாங்கம் அரசியல் தீர்மானமொன்றை எடுக்க வேண்டுமென வலியுறுத்திய தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், யாழில் கடந்த 20 வருடங்களில் வாக்காளர் எண்ணிக்கை 2 இலட்சத்தால் குறைவடைந்துள்ளது என்றார்.

பாராளுமன்றத்தின் நேற்று (04) தேருநர்களைப் பதிவுசெய்தல் (திருத்தச்), வேலையாட்களின் தேசிய குறைந்த பட்ச வேதனம் (திருத்தச்), இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு ஆகிய சட்டமூலங்கள் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், யாழ். தேர்தல் மாவட்டத்தில் 7 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றனர். ஆனால் அரசாங்கம் தற்போது அந்த மாவட்டத்தில் உள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையைக் கருத்திற்கொண்டு அதனை 6ஆக குறைத்துள்ளது என்றார்.

1981ஆம் ஆண்டு வாக்காளர் கணக்கெடுப்பின்போது காலி மாவட்டத்திலும் யாழ். மாவட்டத்திலும் ஒரேயளவான வாக்காளர்களே இருந்துள்ளனர். காலியில் 8 இலட்சத்து 14 ஆயிரத்து 531 வாக்காளர்களும், யாழில் 8 இலட்சத்து 30 ஆயிரத்து 557 வாக்காளர்களும் இருந்துள்ளனர்.

ஆனால், 2001 ஆம் ஆண்டு காலியில் வாக்காளர்களின் எண்ணிக்கை 9 இலட்சத்து 90 ஆயிரத்து 437 ஆக இருந்த நிலையில், யாழில் 6 இலட்சத்து 17 ஆயிரத்து 884 ஆக குறைவடைந்துள்ளது.

கடந்த 20 வருடங்களாக யாழில் வாக்காளர் எண்ணிக்கை 2 இலட்சத்து 12 ஆயிரத்து 673ஆக குறைவடைந்துள்ள நிலையில், காலியில் 1 இலட்சத்து 75 ஆயிரத்து 906ஆக அதிகரித்துள்ளது என்றார்.


மூன்று இலட்சத்துக்குக்கும் அதிகமான வாக்காளர்கள் யாழில் அதிகரித்திருக்க வேண்டும். ஆனால், 1983ஆம் ஆண்டு நடைபெற்ற ஜூலை கலவரம், ஒப்பரேசன் லிபரேசன் தாக்குதல், அதன் பின்னரான யுத்தம் காரணமாக வாக்காளர் எண்ணிக்கை யாழில் சரிந்துள்ளது.

வடக்கு, கிழக்கைச் சேர்ந்த அகதிகளாக உள்ளவர்களில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர் இந்தியாவிலும், ஏனையோர் வெளிநாடுகளிலும் உள்ளனர். நாட்டில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தாலேயே இவர்கள் மீண்டும் நாட்டுக்கு வர அஞ்சுகின்றனர்.

எனவே, யாழ். தேர்தல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை தொடர்பில் அரசாங்கம், அரசியல் தீர்மானம் ஒன்றை எடுக்கப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

## மூன்று மாதங்கள் பொறுமைகாக்க முடியாதா?

பா.நிரோஸ்



அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்கு வரவு- செலவுத் திட்டத்தின் ஊடாக தீர்வு காண முடியுமென திட்டவட்டமாகத் தெரிவித்த கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், பட்ஜெட்டை சமர்ப்பிக்க இன்னும் மூன்று மாதங்களே உள்ளன. அதுவரையில் பொறுத்துக்கொள்ள முடியாதா? எனவும் வினவினார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (04) அமர்வில் கலந்து கொண்டு எதிர்க்கட்சி தலைவரின் கேள்விக்குப் பதிலளித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், அதிபர், ஆசியர்களுக்கு சம்பள முரண்பாடுகள் இருப்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. அப்பிரச்சினைக்குத் தீர்வை வழங்க வேண்டும் என்பதிலும் அரசாங்கம் கொள்கைரீதியாக உறுதியாக உள்ளது.

ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை வரவு- செலவு திட்டத்தின் ஊடாகவே தீர்க்க முடியும். அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நாட்டில் ஏற்பட்டிருக்கும் கொரோனா வைரஸ் நிலைமைகளைக் கருத்திற்கொண்டு தனியார் துறையினரின் ஊழியர்களின் சம்பளம் நூற்றுக்கு 40 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

எனினும், ஆசிரியர்களின் சம்பளத்தை ஒரு சதத்தாலும் குறைக்கவில்லை. ஆசிரியர்கள் பாடசாலைகளுக்குச் செல்லவில்லை என்றாலும், அவர்களின் சம்பளம் குறைக்கவில்லை.

நாட்டின் வருமானங்கள் இழக்கப்பட்டுள்ளன. நாடு எத்தகைய பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தாலும் பரவாயில்லை எங்களுக்கு சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டுமென கூறுவது நியாயமா எனவும் அவர் வினவினார்.

மலையகத்துக்கு பரிதாபங்கள் தேவையில்லை

## அங்கிகாரம் வேண்டும்

பா.நிரோஸ்



மலையகத்திலிருந்து மட்டுமே வீட்டு வேலைக்கு வருவதாகக் கூறுவதை என்னால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாதெனத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், மலையகத்துக்கு எவருடைய பரிதாபங்களும் தேவையில்லை. மலையகத்துக்கு வரவேண்டிய அங்கிகாரம், கௌரவம், மரியாதை என மூன்றும் கிடைத்தாலே போதும் என்றார்.

பாராளுமன்றத்தின் நேற்று நடைபெற்ற மூன்று சட்டமூலங்கள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், ஒரு இலட்சத்துக்கும் அதிகமான சிறுவர்கள் நாட்டில் ஆபத்தான தொழில்களில் ஈடுபடுகிறார்கள். இவ்வாறான நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் வீட்டில் உயிரிழந்த சிறுமி விவகாரத்தை வைத்து அரசியல் நாடகம் நடத்துவோர், மலையகத்திலிருந்தே வீட்டு வேலைகளுக்கு ஆட்கள் வருவதாகக் கூறுகிறார்கள். இதனை தன்னால் ஏற்றுக்கொள்ள முடியாது.

வறுமைக்கு இனம், மதம், மொழி கிடையாது. வறுமையில் உள்ளோர் தொழிலுக்குச் செல்கிறார்கள். மலையக மக்கள் தரக்குறைவான எந்தவிதமான தொழில்களையும் செய்யவில்லை. சொந்தக் காலில் நின்று, அவர்களின் பிள்ளைகளைப் படிக்க வைக்கிறார்கள்.

மலையகத்துக்கு எவருடைய பரிதாபங்களும் தேவையில்லை. மலையக இளைஞர்கள் பலர் நாட்டுக்குப் பெருமை சேர்த்து வருகிறார்கள். அது தொடர்பில் எவரும் பேசவில்லை.

மலையகத்தின் கஷ்டத்துக்கு தொழிற்சங்கமும் அரசியல்வாதிகளும் காரணமல்ல. 30 வருடங்களாக மலையக மக்களுக்கு பிரஜாவுரிமை கிடையாது. இதனால், 30 வருடங்கள் மலையகம் பின்தங்கியுள்ளது.

ரிஷாட்டின் வீட்டில் உயிரிழந்த சிறுமி தொடர்பில் கேவலமான அரசியலை செய்து வருகிறார்கள். 18 வயதோ, 14 வயதோ 40 வயதோ யாருக்கு தவறு நடந்தாலும், தவறு தவறுதான்.

எட்டு வருடங்களாக இதுபோன்ற சம்பவங்கள் ரிஷாட் வீட்டில் நடந்துள்ளதாக வாக்குமூலங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. ரிஷாட்தான் இதற்குக் காரணமென நான் கூறவில்லை. ஆனால், இதுபோன்ற சம்பவங்கள் நடக்கவிட்டமைக்கு அவரும் ஒரு காரணமாவார்.


பாதிக்கப்பட்ட சிறுமி ரிஷாட் வீட்டில் எழுதியதாகக் கூறுகிறார்கள். இதெல்லாம் பொய். இதுபோன்ற விடயங்களைச் சும்மா வேடிக்கைப் பார்க்கப்போவதில்லை என்றார்.

இச்சம்பவத்தின் பின்னணியில் உள்ளவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். கடுமையான தண்டனை வழங்குவதன் ஊடாகவே, இதுபோன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நடப்பதை தவிர்க்க முடியும். மேலும் 18 வயதுக்குக் குறைவான சிறுவர்களை வேலைக்கு அனுப்பும் பெற்றோர்களையும் தண்டிக்க வேண்டும் என்றார்.

18 வயது வரையில் இலவசக் கல்வியை கட்டாயமாக்க வேண்டுமெனவும் இதன்போது கல்வி அமைச்சரிடம் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் கோரிக்கை ஒன்றையும் விடுத்தார்.

## 100 நாள்களுக்கு மேலாக ரிஷாட் தடுப்பில் உள்ளார்

பா.நிரோஸ்



பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியூதீன், 100 நாள்களுக்கு மேலாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். அவருக்கு எதிராக குற்றப் பத்திரிகை இதுவரையில் தாக்கல் செய்யப்படவில்லை எனவும் எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்று (04) உரையாற்றிய அவர், ரிஷாட் தொடர்பான வழக்கு விசாரணைகள் 4 தடவைகள் விசாரிக்கப்படாது, ஒத்திவைக்கப்பட்டுள்ளன. எம்.பி ஒருவர் கைது செய்யப்படும்போது அவர் ஏன் கைது செய்யப்படுகிறார் என்பது தொடர்பில் சபாநாயகருக்கு அறிவிக்க வேண்டும். இல்லையெனில் எம்.பியின் வரப்பிரசாதம் பாரதூரமாக மீறப்பட்டதாகவே கருதப்படும் என்றார்.

மொரிஷியஸ்

இந்திய கடற்படையின்

# இரகசிய தளம்

மொரிஷியஸ் தீவான அகலெகாவில் இரகசிய கடற்படைத் தளம் ஒன்றை இந்தியா நிர்மாணிப்பதாக, அல் ஜஸீராவின் விசாரணைப் பிரிவால் பெற்றுக் கொள்ளப்பட்ட செய்மதிப் புகைப்படங்கள், தரையில் நிதித் தரவுகள் வெளிப்படுத்துவதாக அல் ஜஸீரா இணையத் தளம் நேற்று முன்தினம் (03) செய்தி வெளியிட்டுள்ளது.



இந்நிலையில், அல் ஜஸீராவின் ஆதாரங்களை ஆராய்ந்த இராணுவ நிபுணர்கள், கட்டுமானத்திலுள்ள விமான ஓடுபாதையொன்று ஏறத்தாழ நிச்சயமாக இந்தியக் கடற்படையின் கடற்கண்காணிப்புக்காக அமைக்கப்பட்டது போலத் தோன்றுவதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பான தகவல்கள் முதலில், 2018ஆம் ஆண்டு வெளியாகியிருந்த நிலையில், கட்டுமானமானது இராணுவத் தேவைகளுக்கானது அல்லது என மொரிஷியஸும், இந்தியாவும் மறுத்திருந்ததுடன், அத்தீவுக்காரருக்கு உதவவே கட்டுமானம் எனத் தெரிவித்திருந்தனர்.

இரண்டு பாரிய இறங்குதுறைகள், மூன்று கிலோ மீற்றருக்கும் அதிகமான விமான ஓடுபாதை கட்டப்படுவதை செய்மதிப் புகைப்படங்கள் வெளிப்படுத்துகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

உக்ரேன்

அமைச்சரவை கட்டடத்துக்குள்

## கிரனேட்டை வெடிக்க வைப்பதாக அச்சுறுத்தல்

உக்ரேனியத் தலைநகர் கீவ்விலுள்ள அரசாங்கக் கட்டடமொன்றுக்கு வெளியே கிரனேட்டொன்றை வைத்திருப்பது போல இருந்த நபர், நேற்று (04) பணியாளர்களை அச்சுறுத்தியுள்ளார். பின்னர் பாதுகாப்புச் சேவையாளரால் குறித்த நபர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இச்சம்பவம் இடம்பெற்றுக் கொண்டிருக்கும்போது, ஆயுதந் தரித்த பொலிஸார் வீதிகளை மூடியிருந்தனர்.



மலேஷியா

பாராளுமன்ற உறுப்பினர்களிடம்

## 'பெரும்பான்மையை கொண்டிருக்கிறேன்'



மலேஷியப் பாராளுமன்ற உறுப்பினர்களிடத்தே பெரும்பான்மையைக் கொண்டிருப்பதாகவும், அடுத்த மாதம் பாராளுமன்றம் கூடும்போது இதைத் தான் நிரூபிப்பேன் என அந்நாட்டுப் பிரதமர் முஹ்யிட்டின் யஸின் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

பதவி விலகுமாறான அதிகரித்து வரும் அழுத்தங்களுக்கு மத்தியிலேயே குறித்த கருத்தை பிரதமர் யஸின் வெளிப்படுத்தியுள்ளார்.

நம்பிக்கை வாக்கெடுப்பு வரைக்கும் தான் பதவியில் இருக்க வேண்டும் என அரசர் அல் சுல்தான் அப்துல்லாஹ் இணங்கியதாக பிரதமர் யஸின் தெரிவித்துள்ளார்.

எனினும், பிரதமர் யஸினின் கூட்டணியிலுள்ள சில உறுப்பினர்கள் ஆதரவை வாபஸ் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரதமர் யஸின் சட்டபூர்வத்தை இழந்துள்ளதாக அவரது ஆளும் கூட்டணியிலுள்ள பெரிய கட்சியான ஒன்றிணைந்த மலாய்ஸ் தேசிய நிறுவகக் கட்சி தெரிவித்துள்ளது.




## வீடுகளை எரிக்கும் காட்டுத் தீ

கிரேக்கத் தலைநகர் ஏதென்ஸுக்கு வடக்காகக் கட்டுப்படுத்தப்படாத காட்டுத் தீ, நேற்று முன்தினம் (03) வீடுகளை எரித்ததுடன், மக்களை மேலும் வெளியேற்றும் பணிகளை அதிகாரிகள் முன்னெடுத்திருந்தனர்.

30 ஆண்டுகளுக்கும் மேலான கிரேக்கத்தின் மோசமான வெப்ப அலையின்போது, 81 காட்டுத் தீ சம்பவங்களுடன் அதிகாரிகள் போராடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஒன்பது ஹெலிகொப்டர்கள், ஏழு விமானங்கள், 305 பொலிஸாரின் உதவியுடன் 500க்கும் மேற்பட்ட தீயணைப்புப் படைவீரர்கள் தீயுடன் போராடி வருகின்றனர்.

40 பாகைக்கும் அதிகமான வெப்பநிலைகளும் காற்றும் காட்டுத்தீயை, கிரேக்கத்தின் வெவ்வேறான பகுதிகளுக்கு அண்மைய நாள்களில் பரவச் செய்திருந்தன.




## கப்பலில் ஏறியவர்கள் வெளியேறினர்

ஐக்கிய அரபு அமீரகக் கரையோரத்தில் கடத்தப்பட்டதாக கடல் தகவல் மூலங்கள் தெரிவித்த கப்பலில் இருந்து ஏறியவர்கள் வெளியேறியதாக, பிரித்தானியாவின் கடல் வர்த்தக முகவரகம் நேற்று அறிக்கையிட்டுள்ளது.

இக்கப்பல்லானது ஈரானிய ஆதரவுப் படைகள் எனச் சந்தேகிக்கப்படும் படைகளால் கைப்பற்றப்பட்டதாக றொய்ட்டர்ஸுக்கு மூன்று கடற் பாதுகாப்பு தகவல் மூலங்கள் நேற்று முன்தினம் தெரிவித்திருந்தன. இதை ஈரான் மறுத்தியிருந்தது.

இந்நிலையில், கடத்தப்படக்கூடிய சம்பவமானது முடிவடைந்து விட்டதாக குறித்த முகவரகம் தெரிவித்தபோதும், மூன்றாவது தரப்பு தகவல் மூலத்தின் அடிப்படையிலான எச்சரிக்கை அறிவித்தல் குறித்து எவ்வித தகவல்களையும் வழங்கியிருக்கவில்லை.

ஹொர்முஸ் நீரிணையை நோக்கிச் செல்லும் அரேபியக் கடற் பகுதியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றிருந்தது.

டோக்கியோ 2020:

# மக்லொக்லின் உலக சாதனை

ஜப்பானில் நடைபெற்றுவரும் டோக்கியோ 2020 ஒலிம்பிக் போட்டிகளில், பெண்களுக்கான 400 மீற்றர் தடை தாண்டலில் ஐக்கிய அமெரிக்காவின் சிட்னி மக்லொக்லின் சாதனை படைத்துள்ளார்.

போட்டித் தூரத்தை 51.46 செக்கன்களில் கடந்த மக்லொக்லின், இவ்வாண்டு ஜூன் மாதத்தில் ஐ. அமெரிக்க தகுதிகாண் போட்டிகளில் தான் ஏற்படுத்திய 51.90 செக்கன்கள் என்ற நேரப் பெறுதியை முறியடித்தார்.



இதேவேளை, பெண்களுக்கான 10 கிலோ மீற்றர் மரதன் நீச்சலில், பிரேஸிலின் அனா மார்செலா குன்ஹா தங்கப் பதக்கம் வென்றார். இரண்டாமிடத்தை நெதர்லாந்தின் ஷரோன் வான் றௌவென்டால் பெற்றதோடு, அவுஸ்திரேலியாவின் கரீனா லீ மூன்றாமிடத்தைப் பெற்றார்.

இந்நிலையில், இலங்கை நேரப்படி நேற்றுப் பிற்பகல் 2.30 மணி வரையில், 32 தங்கம், 21 வெள்ளி, 16 வெண்கலப் பதக்கங்களுடன் முதலாமிடத்தில் சீனா காணப்படுகின்றது. 25 தங்கம், 29 வெள்ளி, 22 வெண்கலப் பதக்கங்களுடன் இரண்டாமிடத்தில் ஐ. அமெரிக்கா காணப்படுவதுடன், 20 தங்கம், ஏழு வெள்ளி, 12 வெண்கலப் பதக்கங்களுடன் மூன்றாமிடத்தில் ஜப்பான் காணப்படுகின்றது.

முதலாவது இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டி;

## அவுஸ்திரேலியாவை வீழ்த்திய பங்களாதேஷ்

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டியில் பங்களாதேஷ் வென்றது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரில், மிர்பூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில் 23 ஓட்டங்களால் பங்களாதேஷ் வென்றிருந்தது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பங்களாதேஷ்

பங்களாதேஷ்: 131/7 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஷகிப் அல் ஹஸன் 36 (33), மொஹமட் நைம் 30 (29), அஃபிஃப் ஹொஸைன் 23 (17), மகமதுல்லா 20 (20) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜொஷ் ஹேசில்வூட் 3/24 [4], மிற்செல் ஸ்டார்க் 2/33 [4], அன்றூ டை 1/22 [4], அடம் ஸாம்பா 1/28 [4], அஸ்தன் அகர் 0/22 [4])

அவுஸ்திரேலியா: 108/10 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: மிற்செல் மாஷ் 45 (45), மிற்செல் ஸ்டார்க் 14 (14), மத்தியூ வேட் 13 (23) ஓட்டங்கள். பந்துவீச்சு: நசும் அஹ்மட் 4/19 [4], முஸ்தபிஸூர் ரஹ்மான் 2/16 [4], ஷொரிஃபுல் இஸ்லாம் 2/19 [3], மஹெடி ஹஸன் 1/22 [4], ஷகிப் அல் ஹஸன் 1/24 [4])

போட்டியின் நாயகன்: நசும் அஹ்மட்



டோக்கியோ 2020:

## வெண்கலப் பதக்கம் வென்ற பைல்ஸ்

ஜப்பானில் நடைபெற்றுவரும் டோக்கியோ 2020 ஒலிம்பிக் போட்டிகளின் பெண்களுக்கான பலன்ஸ் பீம் ஜிம்னாஸ்டிக்கில், ஐக்கிய அமெரிக்காவின் சிமோன் பைல்ஸ் வெண்கலப் பதக்கம் வென்றார்.

உளநலனைப் பாதுகாக்கும் பொருட்டு, அனைத்து வகையான, வோல்ட், புளோர், அண்ஈவிண் பார் இறுதிப் போட்டிகளிலிருந்து பைல்ஸ் விலகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.





டோக்கியோ 2020:

## மதில்டா கார்ல்சனும் வெளியேற்றம்

ஜப்பானில் நடைபெற்றுவரும் டோக்கியோ 2020 ஒலிம்பிக் போட்டிகளிலிருந்து இலங்கையின் மதில்டா கார்ல்சனும் வெளியேறியுள்ளார்.

குதிரையேற்றப் போட்டியின் தகுதிகாண் போட்டியிலேயே கார்ல்சன் வெளியேற்றப்பட்டிருந்தார்.

கார்ல்சனின் 'சோபின் வா' என்ற குதிரையானது எட்டாவது தடையைத் தாண்ட மறுத்திருந்தது.

டோக்கியோ 2020:

## இறுதிப் போட்டியில் பிரேஸில், ஸ்பெய்ன்

ஜப்பானில் நடைபெற்றுவரும் டோக்கியோ 2020 ஒலிம்பிக் போட்டிகளின் ஆண்களுக்கான கால்பந்தாட்டத்தில் இறுதிப் போட்டிக்கு நடப்புச் சம்பியன்கள் பிரேஸில், ஸ்பெய்ன் ஆகியன தகுதி பெற்றுள்ளன.

பெனால்டி வரை சென்ற மெக்ஸிக்கோவுடனான அரையிறுதிப் போட்டியில் 4-1 என்ற ரீதியில் வென்றே இறுதிப் போட்டிக்கு பிரேஸில் தகுதி பெற்றிருந்தது. போட்டியின் வழமையான நேரத்திலும் மேலதிக நேரத்திலும் 0-0 என்ற கோல் கணக்கில் சமநிலையிலேயே போட்டி காணப்பட்டிருந்தது.

இதேவேளை, மேலதிக நேரத்தில் மார்கோ அஸென்ஸியோ பெற்ற கோலுடன் 1-0 என்ற கோல் கணக்கில் ஜப்பானை அரையிறுதியில் வென்று இறுதிப் போட்டிக்கு ஸ்பெய்ன் தகுதி பெற்றிருந்தது.





டோக்கியோ 2020:

## 200 மீற்றரிலும் தங்கம் வென்ற தொம்ஸன்

ஜப்பானில் நடைபெற்றுவரும் டோக்கியோ 2020 ஒலிம்பிக் போட்டிகளில், பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் ஜமைக்காவின் எலைனி தொம்ஸன் ஹெரா தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.

போட்டித் தூரத்தை 21.53 செக்கன்களில் தொம்ஸன் ஹெரா கடந்திருந்தார். இந்நிலையில், போட்டித் தூரத்தை 21.81 செக்கன்களில் கடந்த நமீபியாவின் கிறிஸ்டியான் மொம்பா இரண்டாமிடத்தையும், 21.87 செக்கன்களில் கடந்த ஐக்கிய அமெரிக்காவின் கப்ரியெல்லி தோமஸ் மூன்றாமிடத்தையும் பெற்றிருந்தார்.

21.94 செக்கன்களில் போட்டித் தூரத்தைக் கடந்த ஜமைக்காவின் ஷெலி ஆன் பிறேஸர் பிறைஸ் நான்காமிடத்தையே பெற்றிருந்தார்.

இந்நிலையில், ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியின் நடப்புச் சம்பியனான தென்னாபிரிக்காவின் வான் நிக்கரெக், இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறத் தவறியிருந்தார்.